Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வேதநெறி

தேனி, வேதபுரி, ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆஸ்ரம வெளியீடு

ஸ்ருதி : 14 ஸ்ம்ருதி : 5



ஸ்ரீஸ்ரீ வால்மீகி மஹரிஷி

ரூ. 15/-

ஸ்ரீமன்மத-புரட்டாசி-செப்டம்பர் 18, 2015

CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:



சென்னை, ஆழ்வார்ப்பேட்டை, நாரதகான ஸபா,
ஸ்ரீஞானாநந்தா ஹாலில்

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள்

அருளுரையாற்றுகிறார்

நாள்: 30-09-2015 புதன் முதல் 08-10-2015 வியாழன் வரை

நேரம்: மாலை 6.30 முதல் 8.00 மணி வரை

பொருள்: **ஸ்ரீமத்பகவத்கீதை**

(13-வது அத்யாயம்-க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாகயோகம்)

நாள்: 01-10-2015 வியாழன் முதல் 08-10-2015 வியாழன் வரை

காலை 7 முதல் 8 மணிவரை

கைவல்ய நவநீதம்

(சந்தேகம் தெளிதல் படலம்)

அனைவரும் வருக! அருளின்பம் பெறுக!!

தொடர்புக்கு...94430 51910 / 97902 92151

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீகுருப்யோ நம:

ப்ரார்த்தனை

मधु मनिष्ये मधु जनिष्ये मधु वक्ष्यामि मधु वदिष्यामि
मधुमतीं देवेभ्यो वाचमुद्यासꣳशुश्रूषेण्यां मनुष्येभ्यस्तं
मा देवा अवन्तु शोभायै पितरोऽनुमदन्तु॥

**மது மநிஷ்யே மது ஜநிஷ்யே மது வக்ஷ்யாமி மது வதிஷ்யாமி
மதுமதீம் தேவேப்யோ வாசமுத்யாஸகும்ஶுஶ்ரூஷேண்யாம்
மநுஷ்யேப்யஸ்தம் மா தேவா அவந்து ஶோபாயை
பிதரோநுமதந்து॥**

(தைத்திரீயாரண்யகம்: 4:1:7)

நற்செயல்களால் மனித உடலில் வாழ்வைப் பெற்றுள்ள உயிராகிய நான் இனிமையான இன்பத்தை நல்கும் உயர்ந்த நற்செயல்களைச் செய்வதற்கு மனதில் திட்டமிடுவேன். இனிமையான இன்பம்தரும் செயல்களைக் கடைப்பிடிக்கத் துவங்குவேன். தொடங்கியபிறகு அவ்வினிமையான இன்பத்தை நல்கும் செயல்களை நிறைவுபெறும்வரை பொறுப்புணர்வுடன் (சோம்பலின்றி) ஆளுவேன். அச்செயல்கள் வெற்றி அடைவதற்கு இனிமையான மந்திரச் சொற்களை ஓதுவேன். தேவர்களும், மனிதர்களும், முன்னோர்களும் மகிழ்ச்சியுடன் கேட்கும் வகையில் இனிமையான சொற்களை உற்சாகத்துடன் கூறுவேன். இவ்வாறு இனிமையான இன்பத்தை நல்கும் எண்ணங்களால், சொற்களால், செயல்களால் அனைவரையும் போற்றி வழிபடும் எனது (உயிராகிய நான் சார்ந்துள்ள) உடலை தீய மரணங்களிலிருந்து இனிமையான இன்பம் தரும் சிறந்த பயன்களை அடைவதன் பொருட்டு தேவர்கள் அனைவரும் பாதுகாத்து அருள்புரியட்டும். முன்னோர்களும் (பித்ருக்களும்) அருள்புரியட்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆசார்ய ஸந்தேசம்



உலகில் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நெறிமுறைகளை, ஒழுக்கங்களை பெரியோர்கள், வேதநெறிப்படி வகுத்துக் கொடுத்திருக்கின்றனர். இறைவனே உலகின் நியதி வடிவமாக இருக்கிறார் என்பதை உணர்ந்துகொண்டு, நியதிக்கு உட்பட்டு நடக்க ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

உலகில் மக்கள் அமைதியாக வாழ்வதற்கென்றே சட்டதிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சட்டம் ஒழுங்கின் நோக்கம், மக்களைத் துன்புறுத்துவதல்ல.

மனம் போனபடி வாழ்தலும், தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு அதீத முக்கியத்துவம் கொடுப்பதும், சமூகத்தின் அமைதிக்குக் கேட்டை விளைவிக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளவற்றை, சிறிதளவுகூட பிசகாமல் அப்படியே கடைப்பிடித்து, மக்களையும் அந்நெறியில் செலுத்துவது ஆட்சியாளர்களின் கடமையாகும்.

குரு கர்மைவ தஸ்மாத்த்வம் பூர்வை: பூர்வதரம் க்ருதம்।।

(ஸ்ரீமத்பகவத்கீதை 4-15)

உனது முன்னோர்களால் முன்பு செய்யப்பட்டதைப் போல, உனக்குரிய கடமையைச் செய்வாயாக என்று பகவான் கீதையில் உபதேசிக்கிறார்.

காலம் மாற மாற, வாழ்க்கை நெறிமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று பலர் எண்ணுகின்றனர். சிலர் பழைய ஸம்ப்ரதாயத்தை விடவே மாட்டார்கள். அவர்கள் பிடிவாதமாக இருப்பதுபோல நமக்குத் தோன்றும். ஆனால் அவர்களுக்கு அதிக பிரச்சனை தோன்றுவதில்லை. சுதந்திரமாக இருப்பதனால், ஒருவர் நிம்மதியாக இருப்பதாகவும் சொல்லிவிட முடியாது.

நாம் காலத்திற்குத் தகுந்தாற்போல், நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோம். அதனைச் சிந்தித்துத்தான் செய்ய வேண்டும். இல்லையென்றால், பலவற்றை நாம் இழந்துவிட நேரிடும்.

எது உயர்ந்தது? மரபுசார்ந்த சிந்தனையா, சுயசிந்தனையா? என்ற கேள்வி எழுகிறது. மரபு சார்ந்த சுயசிந்தனையே உயர்ந்தது.

சமூகத்தை மக்களின் விருப்பு வெறுப்போ, ஆட்சியாளரின் விருப்பு வெறுப்போ, வழிநடத்தக் கூடாது. செங்கோல் வடிவிலான அறமே வழிநடத்த வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேரோட்டி சரியான பாதையில் தேரைச் செலுத்துவதைப் போல, தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள், சரியான பாதையில் மக்களை வழிநடத்திச் செல்ல வேண்டும். தவறு செய்த பிறகு, தண்டனை கொடுப்பதைக் காட்டிலும், மக்கள் தவறு செய்யாமல் இருப்பதற்குரிய வழிமுறைகளைக் கண்டறிந்து செயல்படுத்துவது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

மக்களின் விருப்பு வெறுப்போ, ஆட்சியாளரின் விருப்பு வெறுப்போ சமூகத்தை வழிநடத்தக் கூடாது. செங்கோல் வடிவிலான அறமே வழிநடத்த வேண்டும்.

சிறிதளவுகூட பிசகாமல், அறத்தை முழுமையாகக் கடைப்பிடித்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து, பிறவிப் பயன்பெற மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

रेखामात्रमपि क्षुण्णादा मनोर्वर्त्मनः परम्।
न व्यतीयुः प्रजास्तस्य नियन्तुर्नेमिवृत्तयः।।

ரேகாமாத்ரமபி க்ஷுண்ணாதா மநோர்வர்த்மந: பரம்।
ந வ்யதீயு: ப்ரஜாஸ்தஸ்ய நியந்துர்நேமிவ்ருத்தய:।।
(ரகு வம்ஶம் 1-17)

நூலளவுகூட பிசகாமல் தேரை அதற்குரிய பாதையில் செலுத்தும் தேரோட்டியைப் போல, (திலீப சக்ரவர்த்தியின் ஆட்சியில் அவரால் வழிநடத்தப்பட்டு) மநுவின் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட தர்மங்களை சிறிதளவுகூட பிசகாமல் மக்கள் கடைப்பிடித்தார்கள்.

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (திருக்குறள்: 544)

குடிகளை அன்போடு அரவணைத்து, செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி உலகம் நிலைபெறுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வேதநெறி

ஆசிரியர்
ஸ்ரீமதீ க்ருஷ்ணவேணீ
ஹரிராம்

ஆசிரியர் குழு

ஸ்ரீஸ்வாமீ அத்யாத்மாநந்தர்
ஸ்ரீஸ்வாமீ ப்ரஜ்ஞாநாநந்தர்
ஸ்ரீ எஸ். இளங்கோவன்
ஸ்ரீமதீ ஆனந்தி ராஜ்குமார்

வடிவமைப்பு
ஸ்ரீ ஆ. சுந்தரராஜன்

சந்தா விவரம்

உள்நாடு

5 ஆண்டு	ரூ.700/-
ஆண்டு	ரூ.150/-
தனி இதழ்	ரூ.15/-

வெளிநாடு (சந்தா)

5 ஆண்டு	ரூ.6,000/-
ஆண்டு	ரூ.1,500/-

வேதநெறி தழைத்தோங்க திருத்தொண்டு பரவுவாம்

ச்ருதி : 14 ஸ்ம்ருதி : 6

ப்ரார்த்தனை	1
ஆசார்ய ஸந்தேசம்	2
பொருளடக்கம்	5
வேண்டுகோள்	6
ஆச்ரம நிகழ்ச்சிகள்	8
தலையங்கம்	9
ஸமர்ப்பணம்	11
திருக்குறள்	16
நற்பண்புகள்	22
ஆத்மபோதம்	27
நிகழ்ந்தவை	30
வினா-விடை	34
அதிகாலை தியானம்	37
ஸ்ரீமத்பகவத்கீதை	41
ஈஶாவாஸ்யோபநிஷத்	46
கைவல்ய நவநீதம்	52
நலம் தரும் அறுசுவை அமுதம்	58
Panchakshari and Mrityunjaya Mantra	63

சின்மயாநந்த குரு அடுத்த இதழில்

வேதநெறிக்கு சந்தா, படைப்புகள் மற்றும்
ஆச்ரமத்திற்கு நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

(நிர்வாஹம்: வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட், பதிவு: 226/1992)
23, சத்திரப்பட்டி சாலை, வேதபுரீ, தேனி-625 531.
☎91-4546-253908 www.vedaneri.org
e-mail: swamiomkarananda@gmail.com

சந்தாத் தொகையினை
Vedanta Sasthra Prachara Trust, Theni
என்ற பெயருக்கு டிடி அனுப்ப வேண்டுகிறோம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:

தர்மஸ்ரீ சாச்வத க்ஷேம நிதி

(வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்டிற்கான வைப்பு நிதித் திட்டம்)

வேண்டுகோள்

மெய்யன்புடையீர்,

உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்! ஓம் நமோ நாராயணாய!!

- ஆதிகுருவின் அருட்துணை கொண்டு பாரத நாட்டின் தெய்விகப் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாத்து வளர்த்து வருகின்ற இவ்வமைப்பின் அறப்பணிகள் அனைத்தும் வருங்காலத் தலைமுறையினருக்கும் பயன்படும் வகையில், தொய்வின்றி சீராக நிகழ தர்மஸ்ரீ சாச்வத க்ஷேம நிதி என்ற பெயரில் வைப்புநிதித் திட்டம் ஒன்று அன்புடன் அறிவிக்கப்படுகிறது.
- மெய்யன்பர்கள் தனியாகவோ, குடும்பமாகவோ, குழுவாகவோ ரூபாய் ஒரு லக்ஷம் (அல்லது அதற்கு மேலும்) நன்கொடை வழங்கி ட்ரஸ்டின் அறப்பணிகளுக்கு உதவி புரிய வேண்டுகிறோம்.
- 1500 மெய்யன்பர்களிடம் ₹1,00,000 வீதம் நன்கொடையாகப் பெறவேண்டும் என்பது இத்திட்டத்தின் இலக்காகும். இவ்வாறு பெறப்படும் தொகை வங்கியில் வைப்பு நிதியாகச் சேர்க்கப்படும். இந்நிதியில் இருந்து வரும் வட்டித் தொகையினை மட்டும் கொண்டு அறப்பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம்.
- இத்திட்டத்தில் பங்குகொள்ளும் மெய்யன்பர்கள் ட்ரஸ்டின் புரவலர் உறுப்பினர்களாகக் கௌரவிக்கப்படுவார்கள்.
- புரவலர் உறுப்பினர்கள் ஆண்டுக்கு ஒருமுறை பங்குபெறும் வகையில் கலந்தாய்வுக்கூட்டம் நிகழ்த்தப்படும்.
- இத்திட்டத்தில் பங்குகொள்ளும் மெய்யன்பர்களுக்கு அவர்கள் குறிப்பிடும் நாளில் (பிறந்த நாள், மணநாள் அல்லது தாங்கள் விரும்புகின்ற முக்கியமான ஒரு நாள்) ஆண்டிற்கு ஒரு முறை ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி அருள் முன்னிலையில் ஸங்கல்பம், பூஜை, ப்ரார்த்தனை செய்து திருவருட்ப்ரஸாதம் பேரன்புடன் அனுப்பி வைக்கப்படும்.
- மேலும், ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதியில் நடைபெறும் அனைத்து விசேஷ பூஜை காலங்களிலும் ஸங்கல்பம், பூஜை, ப்ரார்த்தனை செய்து திருவருட்ப்ரஸாதம் அனுப்பி வைக்கப்படும்.
- மெய்யன்பர்கள் அனைவரும் உள்ளார்ந்த ப்ரார்த்தனையுடன், தாங்கள் மட்டுமல்லாது, மற்ற மெய்யன்பர்களையும் இப்புண்ணிய திட்டத்தில் பங்குபெறுமாறு செய்து ஈத்து உவக்கும் இன்பத்தை உணரப் பேரன்புடன் வேண்டுகிறோம்.
- நன்கொடையினை வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட், தேனி என்ற பெயரில் வரைவோலை/ காசோலையாக ஆச்ரம முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். நன்கொடைக்கு வருமான வரி விலக்கு (80ஜி) உண்டு.

அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு. (திருக்குறள்: 757)
அன்பினால் பெறப்பட்ட அருள் என்று கூறப்படும் குழந்தை, பொருள் என்று கூறப்படும் செல்வம் உள்ள செவிலித்தாயால் வளர்வதாகும்.

இங்ஙனம்
ஆதிகுருவின் அருட்பணியில்,
ஸ்வாமி ஓங்காரானந்த
-அறங்காவலர்கள்,
வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்,
வேதபுரீ, தேனி-625 531.

நன்கொடைப் படிவம், பூஜை, ப்ரார்த்தனைக்கான ஸங்கல்பப் படிவங்களை வலைத் தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

www.vedaneri.org

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ:

Dharmasri Shaswatha Kshema Nidhi

(Corpus for Vedanta Sasthra Prachara Trust)

Patron Members

288	Sri G. Sukumar	Chennai
289	Sri R. Sundararajan	Chennai

Thanks you all for joining hands with us in the propagation of our ancient tradition, wisdom and promoting the cultural values by way of supporting the scheme. We, the trustees and gurusevaks, pray Adiguru Sri Prajna Dakshinamurti for your sreyas.

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

வேதபாடசாலை வித்யார்த்திகள் சேர்க்கை அறிவிப்பு

தேனி, வேதபுரீ, ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடத்தில் யஜுர்வேத பாடசாலையில், வரும் செப்டம்பர் 16, 2015முதல் தொடங்கவிருக்கும் வகுப்புகளுக்கு, வித்யார்த்திகள் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர்.

உணவு, தங்குமிடம், படிப்பு, மருத்துவம் அனைத்தும் இலவசம்.

விருப்பமுள்ள, உபநயன சம்ஸ்காரம் ஆன, 7 முதல் 12 வயதுள்ள மாணவர்களுடைய பெற்றோர், மாணவனின் பிறப்புச் சான்றிதழ், (இருந்தால்) பள்ளிச் சான்றிதழ் மூன்று பாஸ்போர்ட் சைஸ் கலர். போட்டோ ஆகியவற்றுடன் நேரில் வரவும்.

ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடம்
ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம், சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி-625 531. தொலைபேசி 04546-253908
மின் அஞ்சல் : swamiomkarananda@gmail.com

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:
ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடம்
வேதபுரீ, தேனி.

நிகழ்பவை

நாள்	நிகழ்ச்சி	நேரம்
புரட்டாசி 1, வெள்ளி (18-09-2015)	தமிழ் மாதப்பிறப்பு சிறப்பு வழிபாடு	காலை 7.00-8.30
புரட்டாசி 8, வெள்ளி (25-09-2015)	மஹாப்ரதோஷ சிறப்பு வழிபாடு	மாலை 4.30-6.30
புரட்டாசி 10, ஞாயிறு (27-09-2015)	பௌர்ணமி சிறப்பு வழிபாடு	காலை 7.00-8.30
புரட்டாசி 11, திங்கள் (28-09-2015)	சாதுர்மாஸ்ய வ்ரதம் நிறைவு	காலை 7.30-8.30
புரட்டாசி 23, சனிக்கிழமை (25-09-2015)	மஹாப்ரதோஷ சிறப்பு வழிபாடு	மாலை 4.30-6.30
புரட்டாசி 26, செவ்வாய் (13-10-2015)	ஸ்ரீசரந்நவராத்ரீ பூஜைகள் ஆரம்பம்	மாலை 7.00-8.30
புரட்டாசி 30, சனிக்கிழமை (17-10-2015)	ஸ்ரீமஹாகும்பாபிஷேகதின நக்ஷத்ர சிறப்பு வழிபாடு	காலை 7.00-8.30
ஐப்பசி 1, ஞாயிறு (18-10-2015)	தமிழ் மாதப்பிறப்பு சிறப்பு வழிபாடு	காலை 7.30-8.30

வியாழக்கிழமைதோறும் மாலை 5.30 முதல் 7.00 மணி வரை கூட்டுவழிபாடு சிறப்பாக நடைபெறும்.

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் நிகழ்ச்சிகள்

2015, Sep 30 முதல் **Oct 8** வரை, சென்னை, நாரதகான ஸபா,
ஞானவேள்வி மாலை 6.30-8.00 வரை,
ஸ்ரீமத்பகவத்கீதை: அத்:13
அக்.1 முதல் அக். 8 வரை காலை 7-8 மணி கைவல்ய நவநீதம்
Cont: 94430 51910/9790292151

Oct. 13-18 புதுக்கோட்டை, ஸ்ரீபுவநேச்வரீ அவதூத வித்யாபீடம்,
ஸ்ரீசரந்நவராத்ரீ விழா & ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமமுகாம்.
காலை 6.30-7.30மாலை 4.30-5.30
Cont: 94437 85756 / 94861 43807

Nov. 14-22 மும்பை, 5-வது சாலை, செம்பூர், (டைமண்ட் கார்டன் அருகில்) -
ஸ்ரீசிருங்கேரி சாரதாபீடத்தில்: ஞானவேள்வி
காலை 7-8 மணி வரை விவேகசூடாமணி
அக். 15 முதல் மாலை 7-8.15 மணி ஸ்ரீமத்பகவத்கீதை (கர்மயோகம்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தலையங்கம்

இன்று முதியோர் இல்லங்கள் பெருகி வருகின்றன. அதில் வசிக்க விரும்புவோரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகின்றன.

'என்ன ஆனாலும் என் பெற்றவர்களை நான் முதியோர் இல்லத்தில் விட மாட்டேன், அவர்கள் என்னுடன்தான் இருக்க வேண்டும்' என்று கூறும் பலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இளமையில் கற்று, நடு வயதில் நன்கு பொருளீட்டி, திருமணம் முடித்து, குழந்தைகள் பெற்று, அவர்களை வளர்த்து ஆளாக்கிய பிறகு, கடமைகளை நிறைவுசெய்துவிட்டு, தன்னைப் பற்றிய ஆராய்ச்சிக்கு நேரம் ஒதுக்குமாறு நம் பாரதப் பண்பாட்டு வாழ்க்கைமுறை வலியுறுத்துகிறது.

நம் முன்னோர் குடும்பப் பொறுப்புக்களை அடுத்தத் தலைமுறையிடம் கொடுத்துவிட்டு, இறைவழிபாட்டிற்கும், ஆன்ம சிந்தனைக்கும் நேரம் ஒதுக்கி வந்தனர்.

ஆனால் இன்று?

வயதானவர்கள் வசிக்கும் பெரும்பாலான இல்லங்களில், குடும்பப் பொறுப்புக்கள் அனைத்தையும் அவர்களே சுமக்கிறார்கள். 'என் மகனுக்காகவும், பேரக்குழந்தைகளுக்காகவும் நான் இதைக்கூட செய்ய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாட்டேனா?' என்று பெற்றோரும், 'என் பெற்றோர் எனக்குச் செய்யாமல் யாருக்குச் செய்யப் போகிறார்கள்?' என்று பிள்ளைகளும் எண்ணுகின்றனர்.

விளைவு? ரேஷன் கடைகளின் நீண்ட வரிசைகளில், மின்சாரக் கட்டணம் செலுத்துமிடத்தில், பள்ளிக்கூட உணவு இடைவேளையில், வயதானவர்களை அதிகம் பார்க்க முடிகிறது. அதிலும் பெண்களுக்கு சமையலறையிலிருந்து ஓய்வென்பது இறக்கும் வரை இல்லை.

பெற்றவர்களின் அன்புக்கு எல்லை இல்லை என்பது உண்மைதான். ஆனால் தங்களது முடிவில்லா கடமைகளுக்கு இடையில், பெற்றோரின் ஓய்வைப் பற்றியும், அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியும் பிள்ளைகளும் சிந்திக்க வேண்டும்.

ஓடியாடி சம்பாதிப்பதற்கிடையில் இன்றைய இளைய தலைமுறை, அவ்வப்போது அவரவருக்குரிய வழியில் பொழுதுபோக்குகளுக்கு நேரம் ஒதுக்கத் தவறுவதில்லை.

உடல்நலம், பாதுகாப்பு தாண்டி, வயதானவரின் தேவைகளை இளைய தலைமுறை அடையாளம் கண்டுகொள்ள வேண்டியது மிக முக்கியம். ஆரவாரமில்லாத அமைதியான சூழலை அவர்கள் விரும்பினால், அத்தகைய சூழலை ஏற்படுத்தித் தருவதில் தவறேதும் இல்லை.

பெற்றோர்களும் தங்களுக்கு எது முக்கியம் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். குழந்தைகளை வளர்ப்பதுதான் பெற்றோர்களின் கடமையே தவிர, பேரக்குழந்தைகளை வளர்ப்பது அல்ல. அவ்வாறு எண்ணுவது சுயநலமும் அல்ல.

தன் தலையில் ஒரு நரைமுடியைக் கண்டவுடன், ராமருக்கு முடிசூடிவிட்டு, தவ வாழ்க்கை மேற்கொள்ள காட்டிற்குச் செல்லத் துணிந்தார் தசரத சக்ரவர்த்தி!

பெற்றோரும் பிள்ளைகளும் இதுகுறித்து சிந்தித்தல் நலம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



कूजन्तं राम रामेति मधुरं मधुराक्षरम्।
आरुह्य कविता शाखां वन्दे वाल्मीकि कोकिलम्।।

கூஜந்தம் ராம ராமேதி மதுரம் மதுராக்ஷரம்।
ஆருஹ்ய கவிதா ஶாகாம் வந்தே வால்மீகி கோகிலம்।।

கவிதையாகிற கிளையில் ஏறி அமர்ந்தபடி, ராம ராம எனும் இனிய சொல்லை இனிமையாகக் கூவும் குயிலாக விளங்கும் ஸ்ரீவால்மீகி பகவானைப் போற்றி வணங்குகிறேன்.

ஆதிகாவியமாகிய இராமாயணத்தை உலகுக்கு வழங்கியருளிய ஆதிகவி, ஸ்ரீவால்மீகி மஹரிஷியின் தாமரைத் திருவடிகளில் இந்த வேதநெறி இதழைக் காணிக்கையாக்கி மகிழ்கிறோம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வால்மீகி மஹரிஷி ப்ரசேதஸின் மகனாவார். அவரைப் பற்றி செவிவழிச் செய்தியாக கதை ஒன்று கூறப்படுகிறது. இவர் வருணனின் மகனாகப் பிறந்தார். தவறான சேர்க்கையினால், கொள்ளைக்காரனாக மாறினார். ஒருமுறை அவ்வழியே சென்ற ஸப்தரிஷிகளைத் தாக்க, அவர்கள், இந்தப் பாபச் செயலில் ஏன் ஈடுபடுகிறாய்? நீ கொள்ளையடித்துச் செல்லும் செல்வத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் உனது குடும்பத்தார், உனது பாபத்திலும் பங்கேற்பார்களா? என்று கேட்க, அவர் ஓடிச் சென்று உறவினரிடம் கேட்டார். எவரும் அவரது பாபத்தில் பங்கேற்ப முன்வரவில்லை. அதிர்ந்துபோய் முனிவர்களிடம் திரும்ப, அவர்கள், அவருக்கு ராம நாம மந்த்ரத்தை உபதேசித்தார்கள்.

அந்த மந்த்ரத்தை ஜபித்தபடியே அவர் கடுந்தவத்தில் ஆழ்ந்துவிட்டார். அவரைச் சுற்றி புற்று ஒன்று எழுந்துவிட்டது. வல்மீகம் என்றார் புற்று. புற்றிலிருந்து உதித்ததால், வால்மீகி எனப்பட்டார்.

பாண்டவர்களின் தூதராக, ஹஸ்தினாபுரத்திற்குச் செல்லும் வழியில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் வால்மீகி மஹரிஷியைச் சந்திப்பதாக மஹாபாரதம் கூறுகிறது. (உத்யோக பர்வம் - 83-27)

உலகில் இல்லறம் துறவறம் எனப்படும் வாழ்க்கைமுறைகள் செழிப்பதற்கு வழிகாட்ட, பகவான் அவதாரம் செய்கிறார். கீதையில் கூறியுள்ளபடி, நல்லோரைக் காத்தல் பொருட்டும், தீயோரை அழித்தல் பொருட்டும் யுகந்தோறும் அவதரிக்கிறார்.

இராமாயண காலம் என்பது எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு த்ரேதா யுகத்தைச் சேர்ந்ததாக இருப்பினும், இன்றும் ராமரும் சீதையும், பாரதப் பண்பாட்டின் லக்ஷிய தம்பதிகளாக ஒளிர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பகவான் ராமனாக அவதரித்தபோது, வேதமே ஸ்ரீமத் இராமாயணமாக அவதரித்தது என்று பெரியோர்கள் கூறுவர்.

ஸ்ரீவால்மீகி பகவான் தவம் என்ற சொல்லின் இலக்கணமாக வாழ்ந்தவர். பாரதப் பண்பாடு தவத்தை வலியுறுத்துகிறது. உண்மை பேசுதல் தவம், உண்மையாக நடத்தல் தவம், கேள்வி தவம், அமைதி தவம், புலனடக்கம் தவம், மனவடக்கம் தவம், ஈகை தவம், வேள்வி தவம், பரம்பொருளை உபாஸித்தல் தவம் என்கிறது மஹாநாராயண உபநிஷத்.

தப: என்ற சொல்லோடுதான் ஸ்ரீமத் இராமாயணம் தொடங்குகிறது. இராமாயணம், தவத்திற்கு விரிவுரை போன்று அமைந்துள்ளது.

> தப: ஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீ வாக்விதாம் வரம்।
> நாரதம் பரிப்ரச்ச வால்மீகிர்முநிபுங்கவம்।।

தவத்திலும் வேதக்கல்வியிலும் ஆழ்ந்தவரும், வேதவாக்கை அறிந்தவர்களுள் தலைசிறந்தவரும், முனிவர்களுள் உத்தமமானவருமான நாரதரைத் தவத்தில் நிலைபெற்றவரான வால்மீகி மஹரிஷி பின்வருமாறு வினவினார். குணவான், வீர்யவான், அறத்தை அறிந்தவன், நன்றி மிக்கவன், உண்மையே பேசுபவன், திடவ்ரதமுள்ளவன், ஸதாசாரத்துடன் கூடியவன், அனைத்து உயிர்களுக்கும் ஹிதமானவன், கல்வியில் சிறந்தவன், வலிமை மிக்கவன், ப்ரியமான பார்வை உடையவன், தைர்யம் மிக்கவன், கோபத்தை வென்றவன், ஒளி மிக்கவன், பொறாமை இல்லாதவன், தேவர்களும் நடுங்கக் கூடிய ஆற்றல் படைத்தவன் - இத்தகைய குணநலன்கள் உடைய ஒருவர் இருக்கிறாரா?

இவ்வாறு நாரத மஹரிஷியிடம் வினவ, நாரதரும் இருக்கிறார் என்று கூறி, ஸ்ரீராமனின் திவ்ய சரித்திரத்தைக் கூறுகிறார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ராமாயணத்தைக் கேட்டு மகிழ்ந்த வால்மீகி, தமது சீடர்களுடன் நாரதரை முறைப்படி பூஜித்தார். அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு நாரதர் கிளம்ப, வால்மீகி தமஸா நதிக்கரைக்குச் சென்றார்.

அங்கு இனிய குரல் படைத்த, இணைபிரியாத இரண்டு சக்ரவாஹ பறவைகளைக் கண்டார். வேடன் ஒருவன் அம்பு தொடுத்து ஆண் பறவையை அடித்து வீழ்த்த, பெண் பறவையும் புலம்பிக் கதறிற்று. இக்காட்சியைக் கண்ட தர்மாத்மாவான வால்மீகி மஹரிஷியின் உள்ளத்தில் இரக்கம் சுரந்தது. வேடனைப் பார்த்து, 'இரு பறவைகளும் கூடி மயங்கிக் கொண்டிருந்தபோது, ஒன்றைக் கொன்றுவிட்டாய். அதனால் நீ நீடித்துப் பல ஆண்டுகள் வாழ மாட்டாய்' என்று சாபமிட்டார். அந்த சாபம் ஒரு ச்லோக வடிவில் அமைந்திருந்தது. பிறகு நதிக்கரையில் நீராடிவிட்டு, இந்த விஷயத்தைச் சிந்தித்தபடியே தமது ஆச்ரமத்திற்குத் திரும்பினார்.

அச்சமயம் படைப்புக் கடவுளான ப்ரம்மதேவர், வால்மீகி மஹரிஷிக்குக் காட்சி கொடுத்தார். ப்ரம்மதேவரை முறையாகப் பூஜித்து, அவர் எதிரில் தியானத்தில் அமர்ந்தபோதும், அந்தப் பெண் பறவையின் துன்பத்தை எண்ணியவராய், மீண்டும் தாம் கூறிய ச்லோகத்தை எண்ணிப் பார்த்தார். அப்பொழுது ப்ரம்மதேவர், ''அது உம்மால் இயற்றப்பட்ட ச்லோகம்தான். என்னுடைய அருளால், அந்த வாக்கு உமது உள்ளத்தில் உதித்து, நாவில் வெளிப்பட்டது. இனி, புனிதமான ராமரின் சரிதையை முழுவதும் ச்லோக வடிவில் இயற்றுவீராக!

இந்தக் காவியத்தில் உமது வாக்கு சிறிதளவும் பொய்யாகாது. பூவுலகில் மலைகளும் நதிகளும் எவ்வளவு காலம் இருக்குமோ, அவ்வளவு காலம் ராமாயணக் கதை உலகங்களில் உலவப் போகிறது'' என்று கூறிவிட்டு மறைந்தார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இறையருளால் வால்மீகி மஹரிஷி, இருபத்து நான்காயிரம் ச்லோகங்கள் பாடினார். அவைகளை ஐந்நூறு ஸர்க்கங்களாகவும், ஆறு காண்டங்களாகவும், பிறகு உத்தர காண்டமாகவும் வகுத்தார்.

ராமாயணத்தை பூர்த்தி செய்த பிறகு, யாருக்கு இதனை உபதேசிக்கலாம் என்று அவர் த்யானத்தில் ஆழ்ந்திருந்தபோது, முனிவேஷம் பூண்ட லவனும் குசனும் அவரை நமஸ்கரித்தார்கள். மேதாவிகளாகவும், வேதங்களில் நன்கு தேர்ந்தவர்களாகவும் விளங்கிய அவ்விருவரையும் கண்டு பிரபுவாகிய வால்மீகி, வேதத்தைக் கதை மூலம் விளக்கும் பொருட்டு அவர்களைச் சீடர்களாக ஏற்றார். படித்தாலும் பாடினாலும் இனிமை சேர்க்கும் இந்தக் காவியத்தை, லவ குசர்கள் கற்று, மூன்று ப்ரமாணங்களுடனும், ஏழு ஜாதிகளுடனும் கட்டப்பட்ட வீணைக் கம்பிகளில் தாளத்துடன் ஒத்துப் பாடினார்கள். அது ஹாஸ்யம், ச்ருங்காரம், கருணை, வீரம், ரௌத்ரம், பயாநகம், பீபத்ஸம் முதலிய ரஸங்களுடன் கூடியதாக இருந்தது. அயோத்தியின் வீதிகளிலும், ராஜ மார்க்கங்களிலும், எல்லாவிடங்களிலும் பாடிப் புகழ்பெற்ற அவ்விருவரும், ஸ்ரீராமரின் திருமாளிகையை அடைந்தார்கள்.

ஸ்ரீராமரின் அனுமதியோடு, சபையில் ஸ்ரீமத்ராமாயணத்தை அரங்கேற்றினார்கள்.

वाल्मीकिगिरि-सम्भूता राम-सागर-गामिनी।
पुनातु भुवनं पुण्या रामायण-महानदी।।

வால்மீகிகிரி-ஸம்பூதா ராம-ஸாகர-காமிநீ।
புநாது புவநம் புண்யா ராமாயண-மஹாநதீ।।

வால்மீகி என்ற மலையிலிருந்து உற்பத்தியாகி, ராமர் எனும் கடலை நோக்கிப் பாயும் இராமாயணம் என்ற புண்ய நதியானது உலகைத் தொடர்ந்து புனிதமாக்கட்டும்!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருக்குறள்
பொருட்பால்

● 62-வது அதிகாரம், ஆள்வினை உடைமை

ஆள்வினை=வினையை ஆளுதல். செயலை இடைவிடாத முயற்சியுடன் திறம்படச் செய்தல் என்னும் பொருளில் அமைந்துள்ளது.

ஆள்வினையுடைமை=வினைகளை ஆளும் தன்மையை உடையவராக இருத்தல்.

வினைகளை அதாவது செயல்களை முயற்சியுடன் செய்யும் தன்மையை நன்கு உடையவராக இருத்தல்.

இதற்கு முந்தைய அதிகாரத்தில் உள்ளத்தில் எண்ணங்கள் நிலையில் மடி எனப்படும் சோம்பல் தலைவனுக்கு அல்லது அரசனுக்கு இருக்கக்கூடாது என்று அறிவுறுத்தினார்.

மனச்சோம்பலை நீக்குவதோடு உடற்சோம்பலையும் நீக்கிச் செயல்படவேண்டும் என்பது இவ்வதிகாரத்தின் மையக்கருத்தாகும்.

எண்ணங்களாலும், சொற்களாலும், உடலுறுப்புகளாலும் நல்ல செயல்கள் புரியும் வாய்ப்பு மனித உடலில் வாழும் உயிருக்குக் கிடைத்துள்ள அரிய வாய்ப்பு என்பதை நன்கு உணர்ந்து செயல்படவேண்டும் என்று தர்ம சாஸ்த்திரங்கள் அனைத்தும் உபதேசித்துள்ளன.

இவ்வதிகாரத்தில் முயற்சியின் சிறப்பும் முயற்சியில்லாதவனது குற்றமும், கூறப்படுகிறது.

செல்வம் வருவது முயற்சியால், வறுமை வருவது முயற்சி இன்மையால் என்றும்,

ஊழினால் எத்துன்பம் ஏற்படினும் விடாமுயற்சியுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம் என்றும் உணர்த்தப்படுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

1

**அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.**

அருமையுடைத்தென்று -	செயல்புரியும் வாய்ப்பு அரிய தன்மையை உடையதென்று உணர்ந்து
அசாவாமை வேண்டும் -	உடல் சோர்வுறாது செயல் புரியும் தன்மையை வளர்க்க வேண்டும்.
முயற்சி -	அத்தகைய அறிவுபூர்வமான முயற்சியே
பெருமை -	பெருமையை (பெரிய தன்மை; புகழ்; செயலின் பயனாகிய வெற்றி)
தரும் -	தந்து அருளும்.

செயல்புரியும் வாய்ப்பு அரிய தன்மையை உடையதென்று உணர்ந்து, உடல்சோர்வுறாது செயல்புரியும் தன்மையை வளர்க்க வேண்டும். அத்தகைய அறிவுபூர்வமான முயற்சியே பெருமையை (பெரிய தன்மை; புகழ்; செயலின் பயனாகிய வெற்றி) தந்து அருளும்.

நம்மால் முடியாது என்று தளர்வுறக்கூடாது. வெற்றியடைய வேண்டும் என்ற பேரார்வத்துடன் கூடிய முயற்சி நிச்சயம் வெற்றியைக் கொடுத்து நமக்குப் பெருமையளிக்கும் என்ற எண்ணத்துடன் செயல்படவேண்டும் என்ற பொருளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

2

**வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**

உலகு	-	உலக மக்கள்
வினைக்குறை	-	குறைவில்லாது செய்து முடிக்க வேண்டிய செயலை (முயற்சியை)
தீர்ந்தாரின்	-	செய்யாமல் விட்டு விட்ட (தலைவனை-அரசனை)
தீர்ந்தன்று	-	ஒதுக்கி விடுவார்கள். (எனவே)
வினைக்கண்	-	செய்து முடிக்க வேண்டிய அவசியமான செயல்களைச்
வினைகெடல்	-	செய்யாமலிருப்பதை
ஓம்பல்	-	நீக்கிவிட வேண்டும். (முயற்சியில் தளர்வுறாது செயல்புரிய வேண்டும்.)

உலக மக்கள் குறைவில்லாது செய்து முடிக்க வேண்டிய செயலைச் (முயற்சியை) செய்யாமல் விட்டுவிட்ட தலைவனை-அரசனை ஒதுக்கிவிடுவார்கள். எனவே, செய்து முடிக்கவேண்டிய அவசியமான செயல்களைச் செய்யாமலிருப்பதை நீக்கிவிடவேண்டும். முயற்சியில் தளர்வுறாது செயல்புரிய வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

3

**தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.**

தாளாண்மையென்னும்	-	முயற்சியுடன் செயல்புரியும்
தகைமைக்கண்	-	சிறந்த மேலான பண்பில் தான்
வேளாண்மையென்னும்	-	எல்லோருக்கும் உதவிபுரியும்
செருக்கு	-	உயர்ந்த பெருமிதமானது
தங்கிற்று	-	நிலைபெற்றுள்ளது.

முயற்சியுடன் செயல்புரியும் சிறந்த மேலான பண்பில்தான் எல்லோருக்கும் உதவிபுரியும் உயர்ந்த பெருமிதமானது நிலைபெற்றுள்ளது.

1,2,3 குறட்பாக்கள் முயற்சியுடன் இடைவிடாது செயல்புரியும் தன்மையின் சிறப்பை உணர்த்தியது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை வாள்ஆண்மை போலக் கெடும்.

தாளாண்மை இல்லாதான்	- முயற்சி இல்லாதவன்
வேளாண்மை	- பிறருக்கு உதவி செய்ய விரும்புவது
பேடி	- உடல் ஆற்றலில்லாதவன்
கைவாளாண்மைபோல	- கையில் வாளை வைத்துக் கொண்டிருப்பதுபோல
கெடும்	- பயனின்றிக் கெடுத்துவிடும்.

முயற்சி இல்லாதவன் பிறருக்கு உதவி செய்ய விரும்புவது உடல் ஆற்றலில்லாதவன் கையில் வாளை வைத்துக்கொண்டு இருப்பதுபோல பயனின்றிக்கெடுத்துவிடும்.

முயற்சியுடன் செயல்புரியாதவரிடத்தில் உள்ள தலைமைப்பொறுப்பு பயனைத்தராதது மட்டுமின்றி கெடுதலையுமுண்டுபண்ணிவிடும் என்பது கருத்து.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

5

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

இன்பம் விழையான்	-	புலனின்ப நாட்டமற்றவனாய்
வினைவிழைவான்	-	இடைவிடாது முயற்சியுடன் செயல்புரிவதிலேயே நாட்டமுடையவன்
தன்கேளிர்	-	தன்னைச் சார்ந்திருக்கும் அனைவருடைய
துன்பம்	-	துயரச்சுமைகளை
துடைத்து	-	நீக்கி
ஊன்றும்	-	அச்சுமைகளைத் தாங்கும்
தூண்	-	தூணுக்கு நிகராவான்.

புலனின்ப நாட்டமற்றவனாய் இடைவிடாது முயற்சியுடன் செயல்புரிவதிலேயே நாட்டமுடையவன் தன்னைச் சார்ந்திருக்கும் அனைவருடைய துயரச்சுமைகளை நீக்கி அச்சுமைகளைத் தாங்கும் தூணுக்கு நிகராவான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நற்பண்புகள் Values 24



பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ குருபராநந்தர்

பொறுமையின் பலன்

பொறுமையைப் பின்பற்றுவதால் நமக்குக் கிடைக்கும் பலன்களைப் பார்ப்போம்.

1. பொறுமையே பலன்

பொறுமையிலிருந்து பல நன்மைகள் ஏற்பட்ட போதிலும், பொறுமை நமக்குக் கொடுக்கும் மிக மேலான பலன், பொறுமையே. பொறுமை மன அமைதியைக் கொடுத்து அனைத்து விதமான வெற்றிக்கும் காரணமாகிறது. எங்கு பொறுமையை நாம் கடைப்பிடிக்கிறோமோ அங்கு சூழ்நிலையை வென்றுவிட்டவர்கள் ஆகிறோம். இவ்விதம், பொறுமையே பாதையாகவும் பொறுமையே இலக்காகவும் உள்ளது.

2. பல தவங்களுக்கு விதை

பொறுமை, பலவிதமான தவங்களில் நாம் ஈடுபடத் துணைபுரிகிறது. சாதனைகளைத் துவங்குவது சுலபம், தொடர்வது கடினம். பொறுமையின்மையால்தான் உடற்பயிற்சி, தியானப்பயிற்சி, சினம் தவிர்த்தல் போன்ற பல சாதனைகளை நம்மால் தொடர முடிவதில்லை. பொறுமை, நாம் மேற்கொள்கின்ற அனைத்து விதமான தவங்களுக்கும் உதவும் கருவியாகிறது.

3. தடைகளைத் தகர்க்கும் கருவி

நாம் எச்செயலை மேற்கொண்டாலும் அச்செயலுக்குத் தடைகள் வருவது இயற்கை. தடைகளைத் தாண்டிச்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செல்வதற்கான சக்தியை பொறுமைதான் கொடுக்கிறது. பொறுமை இல்லாத பொழுது சிறிய தடையும் மலைபோல் தெரியும். நம்மிடம் பொறுமை இருக்கும்பொழுது எவ்வளவு பெரிய தடை வந்தாலும் அது நமக்குத் தடையாகத் தெரியாது. ஆன்மீக முன்னேற்றத்துக்கு மட்டுமின்றி உலக வாழ்க்கையில் வெற்றி அடைய வேண்டுமானாலும் பொறுமை மிக அவசியம்.

எந்தத் துறையில் ஒருவர் முன்னேறி இருந்தாலும், அவருடைய முன்னேற்றத்துக்குப் பின்னே பொறுமையுடன் கூடிய அயராத உழைப்பை நாம் காண முடியும்.

சமுதாயத்தில் எந்தத் துறையில் ஒருவர் முன்னேறி இருந்தாலும், அவருடைய முன்னேற்றத்துக்குப் பின்னே பொறுமையுடன் கூடிய அயராத உழைப்பை நாம் காண முடியும். மனமாற்றம் என்பது சுலபமாக அடையக் கூடிய இலக்கு அல்ல. அதற்கான பாதையில் வரும் தண்டனைகளை நீக்க, நம்மிடம் இருக்கவேண்டிய சிறந்த ஆயுதம் பொறுமையே. பொறுமை மனதிற்கு அமைதியை மட்டும் தருவதில்லை, தடைகளை நீக்கும் திறனையும் தருகிறது.

உளியின் அடியைத் தாங்கிக்கொள்ளும் பொழுதுதான் பாறையானது அழகான சிலையாக வடிவெடுக்கிறது. அது போலவே அனுபவங்களை பொறுமையுடன் எதிர்கொள்ளும்பொழுதுதான் நம் மனமும் பக்குவம் அடைகிறது.

க்ஷமா சஸ்த்ர கரே யஸ்ய துர்ஜன: கிம் கரிஷ்யதி?
அத்ருணே பதிதோ வஹ்னி: ஸ்வயமேவ உபசாம்பதி?

யாருடைய கரத்தில் பொறுமை என்ற ஆயுதம் உள்ளதோ (அவர்களிடத்தில்) தீயவன் என்ன செய்துவிடமுடியும்!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புல் இல்லாத இடத்தில் விழுந்த நெருப்பு தானே அனைந்து விடுகிறது. இவ்விதம், பொறுமை என்ற மேலான சாதனையின் தன்மையை உணர்ந்து பின்பற்றும்பொழுது, நாம் அடையும் பலனும் மேலானதாகும்.

5. **சேவை** (Service)

சமுதாயத்திற்கு நாம் செய்யும் சேவை இப்புவியில் நாம் வாழ்வதற்காகக் கொடுக்கப்படும் வாடகை.

Service to sociaty is the rent we pay for the space we occupy on the earth.

மக்கள் சேவையே மகேசன் சேவை.

Service to mankaind is service to God.

சேவை என்பது மற்றவர்களுக்கு நாம் செய்யும் உதவி. நம்முடைய உழைப்பு, காலம், அறிவு போன்ற நமக்குக் கிடைத்துள்ள வளங்களை தேவைப்படுபவர்களுக்கு எவ்விதமான எதிர்பார்ப்பும் இன்றி கொடுத்தலே சேவையாகும். மற்றவர்கள் பயன் அடைந்து மகிழ்வதைப் பார்த்து நாம் அடையும் மகிழ்ச்சியை உள்நோக்கமாகக்கொண்டு செய்யும் உதவியே சேவையாகிறது.

ஏன் சேவை செய்கிறோம் என்றும் சேவை செய்வதால் நமக்கு எப்படிப்பட்ட பலன் கிடைக்கும் என்றும் தெரியாமல், மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைத் தர வேண்டும் என்ற இயற்கையான உள் உணர்வு நமக்குள் ஏற்பட்டு, அதன் விளைவாக நாம் செய்கின்ற சேவையே உண்மையான சேவையாகும். உண்மையான சேவையில் ஈடுபட்டு மேலான பலனை இறுதியில் அடைந்த சிலருக்கே இவ்வுண்மை விளங்கும்.

பல கோணங்களில் சேவை என்ற மேலான செயலை நாம் ஆராய்ந்து பார்க்கலாம்.

-தொடரும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடம்

ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்
வேதபுரீ, தேனி-625 531

சாதுர்மாஸ்ய வ்ரதம்

ஸ்ரீமன்மத, ஆடி 15, வெள்ளி முதல் புரட்டாசி 11 திங்கள் வரை
(2015, ஜூலை 31 முதல் செப்டம்பர் 28 வரை)

தேனி, வேதபுரீ - புதுக்கோட்டை பீடாதிபதி
பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள்
சாதுர்மாஸ்ய வ்ரதம் அநுஷ்டித்து வருகிறார்கள்.

சாதுர்மாஸ்ய வ்ரத காலத்தில் தினமும் பகல் 10 முதல் 12 மணிவரை ஸ்ரீதத்த பாதுகா பூஜையும், பிக்ஷா வந்தனமும் நிகழ்ந்து வருகின்றன. மெய்யன்பர்கள் அனைவரும் இவ்வரிய வாய்ப்பை ஆர்வத்துடன் பயன்படுத்திப் பிறவிப் பயனடையப் பேரன்புடன் வேண்டி விரும்பி அழைத்து மகிழ்கிறோம்.

சாதுர்மாஸ்ய வ்ரதம் நிறைவு நிகழ்ச்சி-விச்வரூபயாத்திரை

இடம்: ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடம்
நாள்: புராட்டாசி 11, திங்கள் (28-09-2015)

நிகழ்முறை

காலை 6.30-8.00 மணி	ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்திக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை
9.30 மணி	உபநிஷத் பாராயணம்
பிற்பகல் 3.00 மணி	அருளுரை, மந்த்ராக்ஷதை வழங்குதல், யாத்ராதானம், விச்வரூபயாத்திரை (அரண்மனைப்புதூர் ஸ்ரீகாளியம்மன் திருக்கோயில் வரை)

இங்ஙனம்
அறங்காவலர்கள்,
ஸத்குரு சாந்தாநந்த ஸத்ஸங்கம் ட்ரஸ்ட், சென்னை.
ஸ்ரீபுவநேச்வரீ சாரிடீஸ், ஸ்ரீஸ்வயம்ப்ரகாச ஸதாசிவ அவதூத ட்ரஸ்ட், புதுக்கோட்டை.
வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட், ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸேவா ஸமிதி, வேதபுரீ, தேனி.

தகவல் தொடர்புக்கு 98421 76359 / 94430 51910

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

தேனி, வேதபுரீ,
ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமத்தில்

வேதாந்த-ஸம்ஸ்க்ருத யோகப் பயிற்சி முகாம்

(இரண்டு மாதங்கள்)

நாள்: ஸ்ரீமந்மத ஐப்பசி 5, வியாழன் முதல் மார்கழி 11 ஞாயிறு வரை 2015-அக்டோபர் 22 முதல் டிசம்பர் 27 வரை

முகாமின் அம்சங்கள்

- வேதாந்த அறிமுகம்
- ஸ்ரீமத்பகவத்கீதை ஸாரம்
- தியானம்
- ஸம்ஸ்க்ருதப் பயிற்சி
- இறைவழிபாடு
- யோகாஸநப் பயிற்சி
- பாராயணம்
- தர்ம-புராண பாட வகுப்புகள்
- பயிலரங்கங்கள்
- உரையாடல் அமர்வுகள் போன்றவை

ஆசார்யர்கள்

பூஜ்யஸ்ரீ ஓங்காரானந்த மஹாஸ்வாமிகள்

ஸ்ரீஸ்வாமீ ப்ரஜ்ஞாநாநந்தர் • ஸ்ரீஸ்வாமீ அத்யாத்மாநந்தர்

முகாம் நன்கொடை: ரூ. 6000/- மட்டும்

உணவு, தங்குமிடம் இலவசம்

35 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு மட்டும் முன்னுரிமை
(நன்கொடை ரூ. **2000**/-மட்டும்)

தகுதி • அடிப்படைக் கல்வி பெற்ற, உடல் ஆரோக்கியமுள்ள 60 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலரும் கலந்துகொள்ளலாம். • 50 மெய்யன்பர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். • விண்ணப்பப் படிவங்கள் ஆச்ரம அலுவலகத்திலும், வலைதளத்திலும் கிடைக்கும். • பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஆச்ரம முகவரிக்கு வந்து சேரவேண்டிய கடைசித் தேதி: 2015. செப்டம்பர் 30.

நன்கொடைகளை Vedanta Sasthra Prachara Trust, Theni (SB A/c No. 017401000010179, IFSC Code IOBA0000174) என்ற பெயரில் வரைவோலை / காசோலை வாயிலாக அனுப்ப வேண்டுகிறோம்.
வங்கியில் தொகை செலுத்திய முழுவிவரத்தை தயவுசெய்து மின்அஞ்சல் வாயிலாக தெரிவிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம்: அருளாணைப்படி அறங்காவலர்கள்,
வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட் ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்,
சத்திரப்பட்டி சாலை, வேதபுரீ, தேனி-625 531. ☎ +914546253908
www.vedaneri.org email:swamiomkarananda@gmail.com

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

36

ஆத்ம போதம்

ஆதிசங்கரர் ஆத்ம ஸ்வரூபத்தை எவ்வாறு தியானம் செய்ய வேண்டும் என்பதை கற்றுக்கொடுக்கிறார்.

நல்லறிவாளர்கள் தனது புத்தியினால், தூய்மையான ஆகாசத்தைப் போன்று, அறியப்படுகின்ற அனைத்தையும் ஆத்மாவிலேயே (அவை ஆத்மாவிற்கு வேறாக இல்லை என்ற மெய்யறிவினால்), நன்கு ஒடுக்கி, எப்பொழுதும் ஒன்றான ஆத்மாவைத் தியானிப்பார்களாக என்ற கருத்தை கூறினார்.

நிர்மலமான ஆத்மாவில் ஒடுக்க வேண்டும் என்று கூறுகிறார். நிர்மலமான வானத்தை, மேகங்கள் மறைத்து மூடுவதைப்போல, நம் மனதில் ஒளிர்கின்ற ஆத்மாவை உணர முடியாதவாறு, பல்வேறு எண்ணங்கள் உள்ளத்தை அலைக்கழிக்கின்றன.

நேரம் கிடைக்கும்போதெல்லாம் இந்த நிதித்யாஸனத்தைப் பழகுதல் மிகுந்த பயன் தரும்.

அறியப்படுபொருட்கள் எண்ணற்றவையாக இருக்கின்றன. அவை அனைத்தும் உணர்வுக்கு வேறாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இல்லை. இவ்வாறு அறிந்து, அவற்றை உணர்வில் ஒடுக்க வேண்டும். அவற்றை வெறும் தோற்றம் என்று புரிந்துகொண்டு, ஆத்மா ஒன்று என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

रूपवर्णादिकं सर्वं विहाय परमार्थवित्।
परिपूर्णचिदानन्दस्वरूपेणावतिष्ठते।। ४०

ரூபவர்ணாதிகம் ஸர்வம் விஹாய பரமார்த்தவித்।
பரிபூர்ணசிதாநந்தஸ்வரூபேணாவதிஷ்டதே ॥ 40 ॥

பதவுரை

பரமார்த்தவித் - பரம்பொருள் தத்துவத்தை நன்கு அறிந்துகொண்டவன், ரூப வர்ணாதிகம் ஸர்வம் விஹாய - வடிவம், நிறம் முதலான அனைத்துப் பொருட்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், பரிபூர்ண - முழுமையான, சிதாநந்த ஸ்வரூபேண - அறிவின்ப வடிவமாகத் தன்னை உணரும் மெய்யறிவில், அவதிஷ்டதே - நிலைத்திருக்கிறான்.

பொழிப்புரை

பரம்பொருள் தத்துவத்தை நன்கு அறிந்துகொண்டவன் வடிவம், நிறம் முதலான அனைத்துப் பொருட்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், முழுமையான அறிவின்ப வடிவமாகத் தன்னை உணரும் மெய்யறிவில் நிலைத்திருக்கிறான்.

விளக்கவுரை

பரமார்த்தவித் - பர என்றால் உயர்ந்த, மேலான என்று பொருள். அர்த்தம் என்றால் பொருள். வித் - அறிந்தவன். பரம்பொருளைப் பற்றி அறிந்துகொண்டவன்,

பரமார்த்தம் என்றால் அது ஒன்றுதான் இருக்கிறது. அது ஒன்றுதான் பொருள், மற்றவை பொருள் அல்ல.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பொருளல்ல வற்றைப் பொருளாக உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு

என்கிறார் திருவள்ளுவர்.

உலகில் மக்கள் பொருளல்லாததை, பொருளாக எண்ணுகிறார்கள். எது பொருளோ, அதை எண்ணுவதே இல்லை.

உண்மையான பொருள் ஆத்மாதான். பிற பொருட்களுக்கு இருப்பே இல்லை.

அறியாமையால், ஏதோ சில உலகப் பொருட்களைக் காண்பித்து, அது இல்லையென்றால் நான் இல்லை என்கிறார்கள் சிலர். ஆனால் உண்மையில், நான் இருப்பதால்தான் அனைத்தும் இருக்கின்றன.

அஹம் பரம அர்த்த: - நானே மேலான பொருள். பிற எதுவும் பொருள் அல்ல.

அர்த்த: என்ற சொல்லுக்கு, பணம் என்றும் ஓர் அர்த்தம், பொருள் என்றும் அர்த்தம். தமிழிலும் பொருள் என்ற சொல்லை, பணம், அர்த்தம் ஆகிய இரண்டுக்கும் கூறுகிறோம்.

அர்த்தம் அநர்த்தம் பாவய நித்யம்।

பொருள்(பணம்) பொருளற்றது என்று நாளும் எண்ணுவாயாக. அதில் இம்மியளவுகூட இன்பமில்லை என்கிறார் ஆதிசங்கரர்.

அர்த்தம் என்று ஒன்றன்பாலில் கூறினால், அது பணத்தைக் குறிக்கும். அர்த்த: என்று ஆண்பாலில் கூறினால், அது அர்த்தம் (பொருள்) என்பதைக் குறிக்கும்.

பரம அர்த்த: என்பது பரம்பொருள், மெய்ப்பொருள், உண்மைப்பொருள், உணர்வு, கடவுள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரமார்த்தவித் - எது பரம்பொருள் என்பதைத் தெரிந்துகொண்டவன். குருவிடம் சென்று, சாஸ்திரத்தைக் கற்று அறிந்துகொண்டவன். அத்தகையவன் வடிவம், நிறம் ஆகியவற்றால் குறிக்கப்படும் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

மனிதர்களுக்கு, பணத்திற்கு, பதவிக்கு, படிப்புக்கு என வாழ்வில் எதெதற்கோ முக்கியத்துவம் கொடுக்கிறோம். அதை வைத்துத்தான் மனிதர்களை மதிக்கிறோம்.

அந்த முக்கியத்துவம் மாறிக்கொண்டே இருக்கிறது. இவற்றுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்தால் மனம் சஞ்சலப்படும், நம் மனமே நம்மை உறுத்தும்.

உலகிற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை. கணவன் இப்படி இருக்க வேண்டும், மனைவி இப்படியிருக்க வேண்டும், வீடு இப்படி இருக்க வேண்டும் போன்ற எதிர்பார்ப்புக்களை விட்டுவிட வேண்டும்.

துறவில் இருக்கும் இன்பம், வேறு எதிலும் இல்லை. புறத்துறவு என்பது அகத்துறவின் அடையாளம். உலகிற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை விட்டுவிடுதலே உண்மையான துறவு.

எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு, நிம்மதியை எதிர்பார்த்தால், அதற்கு மிகுந்த மனமுதிர்ச்சி வேண்டும். அனைத்தையும் ஆழ்மனதிற்குள் போட்டு வைத்துக்கொள்கிறோம். அதனால் மனம் அமைதியின்றி தவிக்கிறது. புறத்தில் துறப்பது எளிது, அகத்தில் துறப்பது கடினம். வீடு, குடும்பம், உறவினரை புறத்தில் துறந்துவிடலாம். ஆனால் அவர்களை மனதிலிருந்து நீக்குவது மிகக் கடினம்.

மனதிற்குள் விட பழகுவதற்குத்தான் புறத்துறவு. கொஞ்சம் கஷ்டப்பட்டால், புறத்துறவை மேற்கொள்ளாமலேயே அகத்துறவை மேற்கொள்ளலாம். (தொடரும்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

தேனி, வேதபுரீ

ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடம்

குரு பார்க்க **கோடி நன்மை**

உலக மக்கள் நன்மைக்காகவும், திருப்பணி-மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற வேண்டியும் ப்ரார்த்தனை செய்வதற்காக

" ஓம் நமோ பகவதே தக்ஷிணாமூர்த்தயே மஹ்யம் மேதாம் ப்ரஜ்ஞாம் ப்ரயச்ச ஸ்வாஹா "

ஓம் நமோ பகவதே தக்ஷிணாமூர்த்தயே மஹ்யம் மேதாம் ப்ரஜ்ஞாம் ப்ரயச்ச ஸ்வாஹா

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி மஹாமந்த்ர லிகித ஜப நோட்டு

மெய்யன்பர்களே,

ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடத்தின் ஜீர்ணோத்தாரண, அஷ்டபந்தன, ஸ்வர்ணபந்தன, மஹாகும்பாபிஷேகம் 16.06.2016 வியாழன் அன்று சிறப்பாக நிகழ்த்த இறையருள் கூட்டிவைத்துள்ளது. அதனை முன்னிட்டு திருப்பணிகளும் நிகழவிருக்கின்றன. உலக மக்கள் நன்மைக்காகவும், திருப்பணி-மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற வேண்டியும் ப்ரார்த்தனை செய்வதற்காக ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தியின் மஹாமந்திரத்தை 1008 முறை எழுதும் வாய்ப்பை ஆதிகுரு உருவாக்கித் தந்திருக்கிறார். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இந்த மஹாமந்திரத்தை சிரத்தையுடனும், பக்தியுடனும் எழுதி ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தியின் திருவடிகளில் ஸமர்ப்பணம்செய்து ஆதிகுருவின் பேரருளைப் பெற்று பெறுதற்கரிய புண்ணியமும் பிறவிப் பயனும் பெறப் பேரன்புடன் வேண்டுகிறோம்.

•A4 Size 80 பக்கம் •மஹாமந்த்ரம் எழுதும் முறை •ப்ரார்த்தனை •ஜப ஸமர்ப்பணம் உள்ளடங்கிய லிகித ஜப நோட்டு ஆச்ரம அலுவலகத்தில் கிடைக்கும். தபால் செலவு தனி.

காணிக்கை ரூ.60/- மட்டும்.

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் குரலில் ரூ. 30/- மதிப்புள்ள ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி மஹாமந்த்ரம் குறுந்தகடு அன்பளிப்பு.

லிகித ஜபம் ஸமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 31.03.2016
மேலும் விவரங்களுக்கு 04546-253908/98421 76359

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாங்களும் பங்குபெறுங்கள். மற்றவர்களையும் பங்குபெறச் செய்யுங்கள்.

○ நீங்கள் நினைத்தது நிறைவேறும்

ஓம்
ஸ்ரீகுருப்யோ

தேனி, வேதபுரீ, ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா

மஹாகும்பாபிஷேப் பெருவிழா

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வா

தொடக்க
நாள்:
02.07.2015
வியாழன்

கே
அர்ச்ச

பக்தர்கள் தங்கள் திருக்கரங்களா

காணிக்கை நபர் ஒருவரு

தாமிரத்தால் செய்யப்பட்ட ஆதிகுருவின்
ஆயிரம் ருத்ராக்ஷங்களால் மு

கோடி அர்ச்சனையில் காணிக்கை செலுத்தி வழிபாடு செய்யும்
ஐந்து மூன்று முக ருத்ராக்ஷங்கள், ஆன்மிகப் புத்தகம், திருவருட் ப்ரஸ

நேரில் வர இயலாதவர்கள் காணிக்கையுடன் ரா
அர்ச்சனை செய்துகொள்ளலாம். ப்ரஸா

☎ 04546-253908 / +91-98421

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யா நம:

○ உங்கள் வாழ்க்கை வளமாகும்

நா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடம்

வை முன்னிட்டு (16.06.2016)

ாமிகளின் அருள் முன்னிலையில்

நிறைவு
நாள் :
26.05.2016
வியாழன்

ாடி

சனை

சிறப்பு வழிபாடு

ாலேயே பூஜைசெய்யும் வாய்ப்பு

க்கு ரூ. 500/- மட்டும்

திருவுருவத்திற்கு மூன்று முகம் கொண்ட
ூலமந்த்ர நாம பூஜை நிகழும்.

ும் பக்தர்களுக்கு பூஜை செய்த ஆதிகுரு தாமிரத் திருவுருவம்,
ரஸாதம் ஆகியன அன்புடன் வழங்கப்படும். முன்பதிவு மிக முக்கியம்.

ராசி, நக்ஷத்ரம் ஆகியவற்றை எழுதி அனுப்பி
ாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

2176359 / +91-96004 49031

ஸங்கல்ப பத்ரம் வேதநெறி வித்யாபீடம் www.vedaneri.org வலைதளத்திலும் கிடைக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வினா? விடை

பரம பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ பதிலளிக்கிறார்

தேனி, வேதபுரீ ஆச்ரமத்திற்கு பரமபூஜ்ய ஸ்ரீபரமார்த்தாநந்த ஸ்வாமிஜீ அவர்கள் வருகைபுரிந்தபோது, அன்பர்களின் கேள்விகளுக்கு அளித்த பதில்கள்.

கேள்வி : *ஸ்வாமிஜீ! நம் பாரத தேசத்தின் ஸம்ப்ரதாயப்படி ஒரு முன்மாதிரி ஆச்ரமம் எப்படி இருக்க வேண்டும்?*

பதில் : ஆச்ரமத்தில் லௌகிக அம்சமும் இருக்கிறது, சாஸ்த்ரீய அம்சமும் இருக்கிறது. இரண்டுமே முக்கியம்தான்.

ஆச்ரமத்தின் முக்கிய நோக்கம் சாஸ்த்ரத்தை போதிப்பது என்பதால், அது மிக முக்கியம். வேதாந்த வகுப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதற்கு தேவையானவை இருக்க வேண்டும்.

லௌகிக அம்சத்தில், படிக்க வருபவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வேண்டும். குறைபாடும் இன்றி, ஆடம்பரமும் இன்றி வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

ஒரு சில துறவிகளின் உள்ளங்களில், ஆச்ரமத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை பகவான் ஏற்படுத்துகிறார். அதனால் பலருக்கு நன்மைகள் ஏற்படுகின்றன.

வைராக்யத்தை உறுதிப்படுத்துவதுதான் வேதாந்த பாடத்தின் நோக்கம் எனும்போது, ஆச்ரமத்தில் வசதிகள் செய்வதுகொள்வது தேவையற்றது என்று பலர் எண்ணுகிறார்கள்.

ஆனால் அடிப்படை வசதிக்கும் ஆடம்பரத்திற்கும் இடையில் எல்லைக்கோடு வரைவது மிக சிரமமானது. அது மனிதருக்கு மனிதர் மாறுபடக் கூடியது.

அடிப்படை வசதிகளை நன்கு செய்துகொடுத்து, வேதாந்த பாடத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதே ஒரு முன்மாதிரி ஆச்ரமத்தின் பணியாகும்.

கேள்வி : ஸ்வாமிஜீ! ஞானயோகப் பாதையில் தொடர்ந்து ஈடுபட்டு, ஜீவன்முக்தி இன்பத்தை உணர்வதற்குத் தங்களது வகுப்புகளில் இரண்டுவிதமான வழிமுறைகளைக் கூறி வருகிறீர்கள். FIR (Frequency - **எத்தனை நாட்களுக்கு அல்லது மணிநேரங்களுக்கு ஒருமுறை துன்பப்படுகிறோம் என்ற கால அளவை,** Intensity - **துன்பத்தின் தாக்கம்,** Recovery Time - **அதிலிருந்து மீள்வதற்கு எடுத்துக்கொள்ளும் காலம்) - இது குறைவாக இருக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள்.**

PORT Reduction (Possessions - **உடைமைகள்,** Obligations - **கடமைகள்,** Relationships - **உறவுமுறைகள்,** Transactions - **விவகாரங்கள்) இவை குறைவாக இருக்க வேண்டும் என்றும் கூறுகிறீர்கள்.**

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முன்னால் கூறப்பட்ட FIR தனிப்பட்ட ஒருவரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது, அதனால் அதனைக் கையாள்வதில் அதிக பிரச்சினை இல்லை. ஆனால் அடுத்துக் கூறப்பட்ட PORT என்பதைக் குறைக்க, குடும்பத்தில் கூட இருப்பவர்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. சில நேரங்களில் அவர்களுக்கும் அதனால் சிக்கல் ஏற்படுகிறது. இதனை எவ்வாறு கையாள்வது?

பதில் : குடும்பத்தில் அல்லது ஏதாவது ஓர் அமைப்பில் பலரோடு கூடி வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது, நம்முடைய ஸாதனைக்காக செய்யும் செயல்கள், பிறருக்கும் உகந்ததாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஸாதனைக்காக சிலவற்றைத் தேவையில்லை என்று நாம் பிரித்து வைத்திருப்போம். ஆனால் வீட்டில் இருப்பவர்கள் அவை தேவை என்று எண்ணக்கூடும். எல்லோருடைய ஒத்துழைப்போடுதான், அத்தகைய முடிவுகளை ஒருவர் எடுக்க வேண்டும். கூட்டணி ஆட்சிபோல், எல்லோரும் சேர்ந்துதான் முடிவெடுக்க வேண்டும்.



வார இறுதிகளில் வேதாந்த வகுப்புகள் நடைபெறுகின்றன. கணவன்-மனைவி இருவரில் ஒருவருக்கு வகுப்புக்குப் போக வேண்டும் என்று தோன்றலாம். மற்றவருக்கு வேறெங்காவது செல்லத் தோன்றலாம். அதனால் அதனை அநுசரித்துத்தான் செய்ய வேண்டும்.

பிறரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அதனை அமைத்துக்கொள்ளலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit, Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அதிகாலை தியானம்

பிரார்த்தனை: 3



என் வாழ்வின் உறுதியற்ற தன்மையைப் பார்க்கும்போதும், என் இயலாமையை உணரும்போதும், சில நிகழ்வுகளை நான் நினைத்த வண்ணம் மாற்றியமைக்கக்கூடிய திறனறில்லாதபோதும், நான் இறைவனை என் வாழ்வில் கொண்டுவருகிறேன்.

என்னுடைய விருப்பங்களையும்

பரமபூஜ்ய ஸ்ரீதயாநந்தஸரஸ்வதீ ஸ்வாமிஜீ அவர்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆசைகளையும் நான் நினைத்ததுபோல் நிறைவேற்றிக் கொள்வதில் சிக்கல் இருக்கிறது. ஆசையை நிறைவேற்றிக்கொள்ளத் தேவைப்படும் உறுதியான எண்ணத்திலும், முயற்சியிலும் சில குறைபாடுகள் இருக்கின்றன. எனது அறிவிலும், அறிவின் ஆதாரத்திலும் குறைபாடுகள் இருக்கின்றன. எனது மனதில் சுதந்திரமில்லை. இவற்றையெல்லாம் உணரும்போது, எனது இயலாமையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஏற்றுக்கொள்ளுதலே ஒரு மனமுதிர்ச்சியின் வெளிப்பாடு. மேலும் மனமுதிர்ச்சி பெறும் பொருட்டு, எல்லாம் வல்ல, கண்ணுக்குப் புலப்படாத, அழியாத இறைதத்துவத்தின் அருளை இறைஞ்சுகிறேன்.

என்னால் மாற்ற முடியாதவற்றை ஏற்றுக்கொள்வதற்குரிய மனப்பக்குவத்தை இறைவன் எனக்கு அருளட்டும்! நம் வருத்தங்கள், மனக்கொதிப்புகள், கோபங்கள் அனைத்தும் மன அழுத்தத்தைத் தருகின்றன. அவை அனைத்தும், கடந்த காலத்தை ஏற்றுக்கொள்ளாததாலும், புரிந்துகொள்ளாததாலுமே ஏற்படுகின்றன.

இறைவா! நான் பல்வேறு விஷயங்களைக் குறைகூறி வந்துள்ளேன் : மனிதர்கள், சூழ்நிலைகள், நேரம், இடம், சமூகம். இவையனைத்தும் மறைமுகமாக எனக்கு நன்மையே புரிந்துள்ளதாக நான் எண்ணுகிறேன். அவற்றால்தான் நான் இன்று பிரார்த்தனை செய்யக்கூடிய ஒரு நிலைக்கு வந்துள்ளேன். எவரையும் குறைகூற வேண்டிய அவசியமில்லை என்று இப்போது உணர்கிறேன். என்னையும் நான் குறைகூறிக்கொள்ளத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேவையில்லை என்பதை உணர்கிறேன். என்னால் மாற்ற முடியாதவற்றை, முழு மனதோடு நான் ஏற்றுக்கொள்கிறேன்.

என்னுடைய மனோபாவனையை என்னால் மாற்றிக் கொள்ள முடியும். புரிந்துகொள்வதற்கு என்னால் முயற்சிக்க முடியும். என்னுடைய தனிப்பட்ட வாழ்வில் இன்னும் சிறந்த ஒழுங்குப்பாட்டை என்னால் கொண்டுவர முடியும். தேவைப்படும் விஷயங்களில் என்னால் முயற்சிக்க முடியும்.

> **என்னுடைய ஆற்றலையும் நேரத்தையும் மாற்ற முடியாதவற்றை மாற்ற முனைந்து நான் வீணடித்து இருக்கிறேன்.**

இறைவா! என்னால் மாற்றக்கூடியவற்றை மாற்றுவதற்குத் தேவையான உறுதியான எண்ணத்தையும் முயற்சியையும் எனக்கு அருள்வாயாக! என்னால் மாற்றக் கூடியது எது, மாற்ற முடியாதது எது என்பதை நான் தெளிவாகப் பிரித்து அறிந்து கொள்வேனாக.

பெரும்பாலும், என்னுடைய ஆற்றலையும் நேரத்தையும் மாற்ற முடியாதவற்றை மாற்ற முனைந்து நான் வீணடித்திருக்கிறேன். என்னால் மாற்றக் கூடியவற்றை மாற்ற நான் முயற்சிக்கும்போது, களைத்துவிடுகிறேன். என்னிடம் உறுதியான எண்ணம், ஆற்றல், ஆற்றல், முயற்சி, அதற்குரிய திறன் ஆகிய அனைத்தும் குறைவாக இருக்கின்றன.

என்னால் மாற்ற கூடியது எது, மாற்ற முடியாதது எது என்பதை நான் தெளிவாகப் பிரித்து அறிந்துகொள்வேனாக. என்னால் மாற்றக் கூடியவற்றை ஒவ்வொன்றாக கண்டறிகிறேன். அவற்றை ஒவ்வொன்றாக பட்டியலிடுகிறேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



என்னுடைய தந்தை வேறுவிதமாக இருந்திருக்கலாம் என்று நான் எண்ணுகிறேன். என்னுடைய தாய், மனரீதியாக உறுதியானவராக, தனிவாழ்வில் அதிக ஒழுங்குப்பாடு மிக்கவராக இருந்திருக்கலாம்.

நான் இன்னும் நிறைய படித்திருக்கலாம். என்னுடைய வீடு உண்மையிலேயே ஓர் இனிய இல்லமாக இருந்து இருக்கலாம். நற்பண்புகளின் மதிப்பை நான் முன்னரே அறிந்திருக்கலாம்.

நான் இன்னும் அதிக ஒழுங்குப்பாட்டோடு இருந்திருக்கலாம். குறிப்பிட்ட நபர் கூறிய வார்த்தைகளை நான் காது கொடுத்துக் கேட்டிருக்கலாம். குறிப்பிட்ட மனிதரை நான் சந்திக்காமலே இருந்திருக்கலாம். குறிப்பிட்ட செயலை நான் செய்யாமல் இருந்திருக்கலாம். நான் இன்னும் வேறு சில சிறப்புத் தகுதிகளையும், பட்டங்களையும் பெற்றிருக்கலாம்.

நான் வேறு ராசியில் பிறந்திருக்கலாம். நான் ஆணாகப் பிறந்திருக்கலாம். நான் பெண்ணாகப் பிறந்திருக்கலாம். நான் பிறக்காமலே இருந்திருக்கலாம்.

எத்தனையெத்தனை அங்கலாய்ப்புகளும், பயனற்ற எண்ணங்களும்! இறைவா! இது போன்ற ஏக்கங்களின் பயனற்ற தன்மையை நான் நன்கு உணர்ந்துகொள்ள அருள்புரிவாயாக! இவை அனைத்தையும் நான் உதிர்ப்பதற்கு எனக்கு உதவி புரிவாய்!

ஓம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீமத்பகவத்கீதை 100

ஐந்தாவது அத்தியாயம் - ஸந்நியாஸ யோகம்

துறவறத்தின் இலக்கணத்தையும், இயல்பையும் பகவான் இந்த ச்லோகத்தில் கூறுகிறார்.

ज्ञेयः स नित्यसन्न्यासी यो न द्वेष्टि न काङ्क्षति।
निर्द्वन्द्वो हि महाबाहो सुखं बन्धात्प्रमुच्यते।।

ஜ்ஞேய: ஸ நித்யஸந்ந்யாஸீ யோ
ந த்வேஷ்டி ந காங்க்ஷதி।
நிர்த்வந்த்வோ ஹி மஹாபாஹோ
ஸுகம் பந்தாத்ப்ரமுச்யதே।।

(ஸ்ரீமத்பகவத்கீதை 5-3)

பதவுரை

ய: ந காங்க்ஷதி ந த்வேஷ்டி பவதி। ஸ: நித்யஸந்ந்யாஸீ இதி ஜ்ஞேய:।

ஸ்ரீமதீ நாகமணி கந்தசாமி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மஹாபாஹோ! - பெருந்தோளுடையாய், ய: - எவனொருவன், நிர்த்வந்த: - வாழ்வின் இருமைகளால் பாதிக்கப்படாமல், ந த்வேஷ்டி - எதையும் வெறுக்காமல், ந காங்க்ஷதி - எதையும் விரும்பாமல், பவதி - இருக்கிறானோ, ஸ: நித்யஸந்ந்யாஸீ - அவனை நித்ய ஸந்நயாஸீ, இதி ஜ்ஞேய: - என்று அறிந்துகொள். ஸ: - அவன், பந்தாத் - பந்தத்திலிருந்து, ஸுகம் ப்ரமுச்யதே - எளிதாக விடுபட்டுவிடுவான்.

பொழிப்புரை

பெருந்தோளுடையாய்! எவனொருவன் வாழ்வின் இருமைகளால் பாதிக்கப்படாமல், எதையும் வெறுக்காமல், எதையும் விரும்பாமல் இருக்கிறானோ, அவனை நித்ய ஸந்நயாஸீ என்று அறிந்துகொள். அவன் பந்தத்திலிருந்து எளிதாக விடுபட்டுவிடுவான்.

விளக்கவுரை

மெய்யான துறவறத்தின் இலக்கணத்தையும், இயல்பையும் பகவான் இந்த ச்லோகத்தில் கூறுகிறார். இல்லறமா துறவறமா என்ற கேள்வி எழும்போதெல்லாம், இல்லறமே பெரும்பாலான மக்களுக்கு உகந்தது என்ற கருத்தை பகவான் ஆணித்தரமாக முன்வைக்கிறார். இல்லறமல்லது நல்லறமன்று.

> **இயல்பினான் இல்வாழ்வான் என்பான்**
> **முயல்வாருள் எல்லாம் தலை**

என்றார் திருவள்ளுவர்.

பெரும்பாலான மக்களுக்கு, இல்லறம் எனப்படும் கர்மயோக வாழ்க்கைமுறையே மிகச் சரியான தேர்வு. அதில்தான் ஒருவர் நிறைய அனுபவங்களைப் பெற்று, பக்குவப்பட முடியும். இல்லறத்தை மிகச் சிறப்பாக நடத்துபவர்களுக்குத்தான், இல்லறத்திற்கே போகாமல், நேரடியாகத் துறவறத்தை ஏற்கின்ற பக்குவம் மிகுந்த துறவிகள் பிறப்பார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வெறுமனே துறவறத்தை மேற்கொண்டுவிட்டால், அதில் பக்குவப்படுவதற்கு வாய்ப்பில்லை. துறவியாகிவிட்டால், அவருக்கு நமஸ்காரம் செய்கிறார்கள், உணவளிக்கிறார்கள். அது மட்டுமல்ல, உலகில் பல்வேறு அனுபவங்களைப் பெற்ற பிறகு, திடீரென்று ஒருவர் பக்குவமடையாமலேயே துறவறத்தை மேற்கொண்டுவிட்டால், பலவிதமான உணர்ச்சிப் போராட்டங்களை சமாளிக்க வேண்டி வரும்.

கர்ம ஸந்நியாஸத்தின் முக்கியமான நோக்கம், வேதாந்தம் கற்றல்.

ஸந்ந்யஸ்ய ஶ்ரவணம் குர்யாத்। துறந்த பிறகு, மெய்ப்பொருள் தத்துவத்தைக் கேட்பாயாக! என்றுதான் பெரியோர்கள் அறிவுறுத்துகின்றனர்.

செயல்களைத் துறத்தல், குருமுகமாக வேதாந்தத்தைக் கேட்டல், தானே பரம்பொருள் என்ற ஐக்ய ஞானத்தைப் பெறுதல், மோக்ஷத்தை உணர்தல் - இதுவே வழிமுறை.

கர்மயோகத்தில் செயல்களைத் துறக்காமலேயே மெய்ப்பொருள் ஆராய்ச்சிக்கு நேரம் ஒதுக்க வேண்டும். கேட்பதற்கு எளிதாகத் தோன்றினாலும், நடைமுறையில் அது மிகக் கடினமானது.

உலக வாழ்வில் பல்வேறு பொறுப்புக்களில் வேதாந்தத்தைக் கேட்டு உள்வாங்குவதற்கு நேரம் ஒதுக்குவது சற்று கடினம்தான். அதனால்தான் வேதாந்தம் கற்பதற்கு, துறவறம் மேலானது என்ற கருத்து கூறப்படுகிறது. தண்ணீரில் படகு இருக்கலாம், ஆனால் படகிற்குள் தண்ணீர் வந்துவிடக்கூடாது. அதுபோல, உலகில் நாம் இருக்கலாம், உலகம் நமக்குள் வந்துவிடக்கூடாது என்பார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

துறவறத்தின் நோக்கத்தைப் பகவான் தெளிவுபடுத்துகிறார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

துறவறம் என்பது தர்ப்பணம் செய்து, ஆத்ம பிண்டம் போட்டு, காஷாயம் உடுத்தி, மஹாவாக்யத்தை ஜபம் செய்வது மட்டுமல்ல.

துறவிகள் வாழ்க்கையின் கடமைகளை தர்மமாக விட்டுவிடுகிறார்கள். நேரம் முழுவதும் வேதாந்தத்திற்கே கொடுக்கிறார்கள்.

வேதாந்தத்திற்கே நேரம் கொடுத்து, அவர்கள் என்ன அடையப் போகிறார்கள்? அதை இல்லறத்திலிருந்துகூட அடையலாம்.

எவனொருவன், இருமைகளால் மனம் பாதிக்கப்படாமல், இருமைகளில் விருப்பு வெறுப்பு வைக்காமல் இருக்கிறானோ, அவனை நீ நித்ய ஸந்நயாஸீ என்று அறிந்துகொள் என்கிறார் பகவான்.

> இருமைவகை தெரிந்து ஈண்டு அறம்பூண்டார்
> பெருமை பிறங்கிற்று உலகு.

இந்த உலகம் துறவிகளால் சிறப்புடையது என்கிறார் திருவள்ளுவர்.

வறுமையால் துறவறம் பெறவில்லை. பந்தம் என்றால் என்ன, மோக்ஷம் என்றால் என்ன? இன்பம் என்றால் என்ன? துன்பம் என்றால் என்ன? இருமை வகை - இரண்டின் ஸ்வரூபத்தையும் தெரிந்து தெளிந்து, இவ்வுலகத்தில் துறவறத்தை மேற்கொண்டவர்களால், இவ்வுலகம் சிறப்புற்று விளங்குகிறது.

நிர்த்வந்த்வம் - இருமைகளால் பாதிக்கப்படாமல் இருத்தலை பகவான் கர்மயோகத்திலேயே கூறியிருக்கிறார்.

இருமைகளை விரும்பாத வெறுக்காத மனநிலையே உண்மையான துறவு எனப்படும். இருமைகளை விரும்பாத வெறுக்காத மனநிலையை அடைய என்ன செய்ய வேண்டும்? அதற்கு கர்மயோகத்தில் ஓரளவு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழியிருக்கிறது, பிரம்ம ஞானத்தினால் முழுமையாக வழி இருக்கிறது. விருப்பு வெறுப்பை வெற்றிகொள்ள முதல் உபாயம் கர்மயோகம்.

இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே
ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ।
தயோர்ந வஶமாகச்சேத்தௌ
ஹ்யஸ்ய பரிபந்திநௌ॥ (3-34)

பொறிகளுக்கு, புலனின்பப் பொருட்களில் தோன்றும் விருப்பு வெறுப்பு, மனிதனின் மன அமைதியைப் பறிக்கும் வழிப்பறிக் கொள்ளையர்கள். அவற்றின் வசப்படலாகாது என்று பகவான் முன்னரே கூறியிருக்கிறார்.

விருப்பு வெறுப்பற்ற மனநிலையே துறவறத்தின் வெளிப்பாடு. அது ஸ்தித ப்ரஜ்ஞ லக்ஷணத்திலேயே சொல்லப்பட்டது.

அர்ஜுனனுக்கு கர்மயோகத்தில் ச்ரத்தை வர வேண்டும் என்பதற்காக பகவான், இந்த விருப்பு வெறுப்பற்ற மனநிலை கர்மயோகத்திலேயே கிடைக்கும் என்பதை உணர்த்துகிறார். ஆனால் அத்தகைய மனநிலை துறவறத்தால் உறுதிப்படும், முழுமைபெறும் என்ற கருத்தை அவர் இங்கு கூறவில்லை. அர்ஜுனனின் நன்மை கருதி, அவ்வாறு கூறவில்லை. பக்குவமில்லாமல் விஷயங்கள் புரியாது.

உலகின் இருமை அனுபவங்களால் பாதிக்கப்படாதவன், பந்தத்திலிருந்து எளிதாக விடுபட்டுவிடுவான். ஞானத்தைப் பெறுவது அவனுக்கு எளிது, அதனால் அவன் சுலபமாக மோக்ஷத்தை உணர்ந்துவிடுவான் என்று கூறுகிறார்.

கர்ம ஸந்நியாஸத்தைக் காட்டிலும் ஞானம்தான் நமக்கு முக்கியம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஈஸாவாஸ்ய உபநிஷத்



11

ஸ்ரீமதீ ஆநந்தி ராஜ்குமார்

(பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள் ஆற்றிய விரிவுரையின் எழுத்தாக்கம்)

ஈஸாவாஸ்யம் இதம் ஸர்வம் என்ற மந்த்ரத்திற்கு விளக்கமாக, 3 முதல் 8 வரையுள்ள மந்த்ரங்கள் அமைந்துள்ளன. இந்த எட்டாவது மந்த்ரத்தில் ஆத்ம லக்ஷணம் மீண்டும் சொல்லப்பட்டுள்ளது. இதுவரையில் சொல்லப்பட்ட ஆத்ம தத்துவம் மேலும் பல கோணங்களில் கூறப்படுகிறது. அரைத்த மாவையே அரைப்பது போன்றதல்ல இது, தங்கத்தைப் புடம் போடுவதுபோல.

மந்த்ரம் 8

स पर्यगाच्छुक्रमकायमव्रणं अस्नाविरँशुद्धमपापविद्धम्।
कविर्मनीषी परिभूः स्वयम्भूर्याथातथ्यतोऽर्थान्
व्यदधाच्छाश्वतीभ्यः समाभ्यः॥

ஸ பர்யகாச்சுக்ரமகாயமவ்ரணம்
அஸ்நாவிம்ரஸுத்தமபாபவித்தம்।
கவிர்மநீஷீ பரிபூ: ஸ்வயம்பூர்யாதாதத்யதோऽர்த்தாந்
வ்யததாச்சாஸ்வதீப்ய: ஸமாப்ய:॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பதவுரை

ஸ: - அவன் (ஆத்மா), **பர்யகாத்** - எங்கும் வியாபித்துள்ளான், **ஶுக்ரம்** - எல்லாவற்றையும் ஒளிர்விக்கிறான், **அகாயம்** - சரீரம் அற்றவன், **அவ்ரணம்** - வெட்டுப்படாதவன், **அஸ்நாவிரம்** - ரத்த நாளங்கள் இல்லாதவன். **ஶுத்தம்** - தூய்மையானவன், **அபாபவித்தம்** - பாபத்தினால் பாதிக்கப்படாதவன், **கவி** - அனைத்தையும் அறிபவன், **மநீஷீ** - மனதை ஆள்பவன், **பரிபூ:** - அனைத்திற்கும் அப்பாற்பட்டவன், **ஸ்வயம்பூ:** - தானே தோன்றியவன், **யாதாதத்யத:** - அந்தந்த ஜீவராசிகளுக்கு அவரவர்களுரிய உபாஸனைகளுக்கேற்றாற்போல், **அர்தாந்** - ஆற்ற வேண்டிய கடமைகளை (வகுத்துக் கொடுக்கும் சக்தியை), **சாஶ்வதீப்ய:** - அதிக காலம் இருக்கிற, **ஸமாப்ய:** - ப்ரஜாபதிக்கு, **வ்யததாத்** - (மாயையுடன் கூடிய ஈச்வரனாக இருந்துகொண்டு) வழங்கினார்.

பொழிப்புரை

அவன் (ஆத்மா) எங்கும் வியாபித்துள்ளான், எல்லாவற்றையும் ஒளிர்விக்கிறான், சரீரம் அற்றவன், வெட்டுப்படாதவன், ரத்த நாளங்கள் இல்லாதவன், தூய்மையானவன், பாபத்தினால் பாதிக்கப்படாதவன், அனைத்தையும் அறிபவன், மனதை ஆள்பவன், அனைத்திற்கும் அப்பாற்பட்டவன், தானே தோன்றியவன். அந்தந்த ஜீவராசிகளுக்கு அவரவர்களுரிய உபாஸனைகளுக்கேற்றாற்போல் ஆற்ற வேண்டிய கடமைகளை (வகுத்துக் கொடுக்கும் சக்தியை) அதிக காலம் இருக்கிற ப்ரஜாபதிக்கு (மாயையுடன் கூடிய ஈச்வரனாக இருந்துகொண்டு) வழங்கினார்.

விளக்கவுரை

ஸ: பர்யகாத் - (பரித: அகாத்) அந்த ஆத்மாவானது எங்கும் வியாபித்துள்ளது. ஆகாசம் எவ்வாறு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எல்லாவற்றையும் வியாபிக்கிறதோ, அதுபோல, ஆத்மாவானது அனைத்தையும் வியாபித்துள்ளது. உபநிஷத் நமது கவனத்தை அநாத்மாவின் பக்கத்திலிருந்து ஆத்மாவின் பக்கத்திற்குத் திருப்புகிறது. அநாத்மாவில் வியாபித்திருக்கும் ஆத்ம தத்துவத்தை நாம் எண்ணுகிறோம்.

ஶுக்ரம் (ப்ரகாச ஸ்வரூபம்) அதுதான் எல்லாவற்றையும் ஒளிர்விக்கின்றது. **ஶுக்ரம்** - ஶுக்லம் (ர-ல இரண்டிற்கும் வேற்றுமையில்லை). ஶுக்லம் என்றால் வெண்மை. **தமேவ பாந்தமநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி।** என்கிறது முண்டகோபநிஷத். அது விளக்கிற்கெல்லாம் விளக்கு. அது இருளையும் ஒளியையும் ஒளிர்விக்கும் அறிவாகிய பேரொளி.

சூரிய ப்ரகாசமே ஜட ப்ரகாசம். சூரியனோ, சந்திரனோ, நக்ஷத்திரங்களோ அதனை ஒளிர்விக்க முடியாது. அவ்வாறு இருக்க, தீபாராதனை அக்னி எவ்வாறு ப்ரகாசப்படுத்தும் என்று நீராஜனம் செய்யும்போது கூறுகிறோம்.

ப்ரகாச ஸ்வரூபம் என்ற விஷயத்தைக் கவனமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அகாயம் - காயம் என்றால் சரீரம். அகாயம் என்றால் அசரீரம். லிங்க சரீர வர்ஜிதம் என்கிறார் ஆதிசங்கரர். அதாவது, ஆத்மாவிற்கு ஸூக்ஷ்ம சரீரம் (மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் கிடையாது). அதற்கு மனம் இல்லை. அது மனதிற்கு எட்டாதது. முண்டகோபநிஷத்தில், அப்ராணோ அமநா ஶுப்ர: என்று ஆத்மாவின் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது.

அவ்ரணம் - புண் இல்லாதது. சரீரம் அற்றது என்பதால், அது புண் அற்றது. நம்மை நாம் உடலாக எண்ணிக்கொண்டு, பிறரையும் உடலாகவே பார்ப்பதால்தான் உலகில் துன்பப்படுகிறோம். தன்னை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உடலாக எண்ணிக்கொள்ளும் தேஹாத்ம புத்திதான் அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம். ஆத்மாவின் இந்த லக்ஷணங்களை ஒவ்வொன்றாகச் சிந்திப்பதே ஒருவித தியானமாகும்.

அஸ்நாவிரம் - ஸ்நாவிரம் என்றால் ரத்த நாளங்கள். சைதன்யத்திற்கு ரத்த நாளங்கள் இல்லை. நாம் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்பதற்காகவே உபநிஷத் பரிச்ரமப்பட்டு இதனைக் கூறுகிறது. நாம் இந்த வார்த்தையைக் கேட்டு, ப்ரஹ்மனைக் கற்பனை செய்யக் கூடாது. உண்மையை விசாரம் செய்து புரிந்துகொள்ள வேண்டும்.

ஶுத்தம் - (நிர்மலம்) - தூய்மையானது. அவித்யா மல ரஹிதம். அறியாமை என்னும் அழுக்கு அற்றது. இது காரண சரீர நிஷேதம். அறியாமைக்கும் ஆதாரமான அது, அறியாமை அற்றது. தூய உணர்வு அல்லது ஆத்மா அறியாமையையும் வியாபித்துள்ளது. அதனால்தான் அறியாமையை நம்மால் புறப்பொருளாகக் காண முடிகிறது. எனது அறியாமையை அறியும் நான், அறிவு வடிவமாக இருக்கிறேன்.

அபாபவித்தம் - பாபத்தினால் பாதிக்கப்படாதது. தர்ம அதர்மாதி பாப வர்ஜிதம் என்கிறார் ஆதிசங்கரர். பலருக்கு புண்ணிய பாபத்தில் நம்பிக்கை இருப்பதில்லை. கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று அவர்கள் வாழ்கிறார்கள். சாதாரணமாக, தர்மம் புண்ணியமாகவும், அதர்மம் பாபமாகவும் கருதப்படும். ஆனால் வேதாந்தத்தின் கோணத்தில், புண்ணியமும் பாபமாகவே கருதப்படும். ஏனென்றால், புண்ணியம் மீண்டும் மேலான புலனின்பத்தை அனுபவிக்கும் சரீரத்தையும் பதவியையும் கொடுத்து நம்மை பந்தப்படுத்தும்.

கவி: - எல்லாம் அறிந்தவன். பொதுவாக, கவி என்ற சொல்லுக்கு கவிஞன் என்று பொருள். ஆனால் இங்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஜீவர்களாகவும், ஈச்வரனாகவும், விராட் புருஷனாகவும், ஹிரண்யகர்ப்பனாகவும் இருப்பது அந்தத் தூய உணர்வு ஒன்றே.

கவி: என்றால் அனைத்தும் அறிந்தவன் என்று பொருள். எல்லா புத்தியையும் ஒளிர்விப்பவர். புத்திக்கு அருள்புரிந்துகொண்டிருக்கிறார். இதுவரை கூறப்பட்டவை அனைத்தும் நிர்க்குணபரமான இலக்கணங்கள். இது ஸகுண த்ருஷ்டி. அந்த நிர்க்குண ஆத்மாதான், மாயா ப்ரதிபிம்ப சைதன்யமான ஸகுண ஈச்வரனாக இருக்கிறார்.

ஈஶீ என்றால் ஆள்பவர், கண்காணிப்பவர் என்று பொருள். கடவுளுக்கு கண்காணி என்று ஒரு பெயர் உள்ளது. திருமூலர் திருமந்திரத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதுவும் ஸகுணபரமான லக்ஷணமே ஆகும்.

பரிபூ: அனைத்திற்கும் மேலானவராக அவர் இருக்கிறார். இதை உபாதி த்ருஷ்டியில் பொருள் கொள்ளலாம். இந்த உபாதிகளிலேயே உத்தம உபாதி மாயா உபாதியை உடைய ஈச்வரன். மற்றொரு கோணத்தில் கூற வேண்டுமானால், எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர், எதிலும் ஒட்டாதவன் என்று பொருள் கொள்ளலாம். திரையில் தோன்றும் காட்சிகளுக்கு, திரை ஆதாரமாக இருப்பதைப்போல, இந்த நாமரூப பிரபஞ்சத்திற்கு ஈச்வரன் ஆதாரமாக இருக்கிறார். காட்சிகள் அசைந்தாலும், திரை அசைவதில்லை. திரை அந்தக் காட்சிகளுக்கு அப்பாற்பட்டு இருக்கிறது. அதுபோல, இந்த மாயப் பிரபஞ்சத்தில் பல்வேறு தோற்றங்களைக் காட்டினாலும் அதற்கு அப்பாற்பட்டதாக தூய உணர்வு இருக்கிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்வயம்பூ: – தானே தோன்றியவர். சில கோயில்களில் இயற்கையாக விளைந்தது என்பதைக் குறிப்பிட, இது ஸ்வயம்பூ மூர்த்தி என்பார்கள். மற்றவை எல்லாம் க்ருத்ரிமம் அல்லது செயற்கை. ஹிரண்யகர்ப்பனுக்கு ஒரு பெயர் ஸ்வயம்பூ. இவை எல்லாம் ஸகுண ப்ரம்மபரமான வாக்கியங்கள். ஜீவர்களாகவும், ஈச்வரனாகவும், விராட் புருஷனாகவும், ஹிரண்யகர்ப்பனாகவும் இருப்பது அந்தத் தூய உணர்வு ஒன்றே.

யாதாதத்யத: அர்தாந் ஶாஶ்வதீப்ய: ஸமாப்ய: வ்யததாத் – அர்தாந் என்றால் தனு கரண புவன போகங்கள். ஶாஶ்வதீப்ய: ஸமாப்ய: என்றால் நீண்ட நாட்களாக ப்ரஜாபதிகளாக இருப்பவர்கள். அந்த மெய்ப்பொருளே ஸகுண ரூபமாக, மாயா ஸஹித ப்ரம்மனாக இருந்துகொண்டு, அந்தந்த ஜீவராசிகளுக்கு அந்தந்த கர்மபலனை வகுத்துக்கொடுக்கும் சக்தியை ப்ரஜாபதிக்கு வழங்கினார்.

நிர்குணத்தை விட்டு ஸகுணம் ஒருநாளும் நீங்க முடியாது. ஸகுணம் முழுவதையும் நிர்குணம் வியாபித்துள்ளது. இவ்வாறு தனது யதார்த்த ஸ்திதியில் இருந்துகொண்டு, தனது ஸ்வரூபத்தை விட்டு நீங்காமல் இருந்துகொண்டு, அனைத்து உயிர்களுக்கும் கர்மபலனைக் கொடுத்துக் கொண்டுள்ளார்.

இந்த மந்த்ரத்துடன் ஞானயோகம் நிறைவு அடைகிறது. ஸ: என்று ஆண்பாலில் தொடங்கி, ப்ரஹ்ம லக்ஷணங்களை அகாயம், அவ்ரணம், அஸ்நாவிரம், ஶுக்ரம், ஶுத்தம் என்று ஒன்றன்பாலில் குறிப்பிடுவது, இலக்கணம் கற்றவர்களுக்கு இலக்கண பிழைபோலத் தோன்றும். இது சாந்தஸம், வேத ப்ரயோகம். இதை நாம் மாற்றக் கூடாது. இவற்றை ஆண்பாலிலேயே புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார் ஆதிசங்கரர்.

(தொடரும்)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



கைவல்ய நவநீதம்

பாடல் 11

அடங்கிய விருத்தி யானென் றறிந்தபின் செறிந்த மண்ணின்
குடம்பையுட் புழுமுன் னூதுங் குளவியின் கொள்கை போலத்
தொடங்கிய குருவு மான்ம சொரூபமே மருவ வேண்டி
யுடம்பினுட் சீவ னைப்பார்த் துபதேச மோது வாரே. 11

அடங்கிய விருத்தி யான்என் றறிந்தபின் செறிந்த மண்ணின்
குடம்பையுட் புழுமுன் ஊதும் குளவியின் கொள்கை போலத்
தொடங்கிய குருவும் ஆன்ம சொரூபமே மருவ வேண்டி
உடம்பினுள் சீவ னைப்பார்த் துபதேசம் ஓது வாரே. 11

பதவுரை

அடங்கிய விருத்தியான் - இவனுக்கு அஹங்காரம் இல்லை, **என்று அறிந்தபின்** - என சோதித்து அறிந்த பிறகு, **செறிந்த மண்ணின் குடம்பை உள்** - நெருங்கிய மண்ணினால் ஆன கூட்டினுள், **புழுமுன்** - உள்ள புழுவுக்கு முன்னால், **ஊதும் குளவியின் கொள்கைபோல** - ஒலி எழுப்பும் குளவியின் கொள்கைபோல, **தொடங்கிய குருவும்** - உபதேசிக்கத்

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தொடங்கிய குருவும், உடம்பின் உள் - அவனது உடலுக்குள் வீற்றிருக்கும், ஜீவனைப் பார்த்து - உயிரை நோக்கி, ஆன்ம சொரூபமே மருவ வேண்டி - தன்னுடைய யதார்த்த ஸ்வரூபமான பரம்பொருள் சொரூபத்தை தன்மயமாக உணர வேண்டி, உபதேசம் ஓதுவாரே - உபதேசம் செய்யத் தொடங்கினார்.

பொழிப்புரை

இவனுக்கு அஹங்காரம் இல்லை என சோதித்து அறிந்த பிறகு, நெருங்கிய மண்ணினால் ஆன கூட்டினுள் உள்ள புழுவுக்கு முன்னால், ஒலி எழுப்பும் குளவியின் கொள்கைபோல உபதேசிக்கத் தொடங்கிய குருவும், அவனது உடலுக்குள் வீற்றிருக்கும் உயிரை நோக்கி, தன்னுடைய யதார்த்த ஸ்வரூபமான பரம்பொருள் சொரூபத்தை தன்மயமாக உணர வேண்டி உபதேசம் செய்யத் தொடங்கினார்.

விளக்கவுரை

குருநாதர் சீடனின் தகுதியைப் புரிந்துகொண்டுவிட்டார், பாடத்தைத் தொடங்கிவிட்டார். தகுதி இல்லாதவருக்குக் கொடுக்கக்கூடாது, கொடுத்தால் குரு, சீடர் இருவருக்கும் கஷ்டம். [1]இதனை தபஸ் இல்லாதவனுக்குச் சொல்லக்கூடாது. தபஸ் இருந்தாலும் பக்தி இல்லாதவனுக்குச் சொல்லக்கூடாது. தபஸ், பக்தி இருந்தாலும், கேட்பதற்கு ஆசையில்லை என்றால் சொல்லக்கூடாது. தபஸ், பக்தி, கேட்க விரும்பினாலும், என் வார்த்தையில் பூர்ணமான ச்ரத்தை இல்லாதவனுக்குச் சொல்லக்கூடாது என்று பகவான் கீதையில் கட்டளையிட்டிருக்கிறார்.

தபஸ், ஈச்வர-குரு-சாஸ்த்ர பக்தி, கேட்க விருப்பம், பூர்ண ச்ரத்தை - இவை உடையவனுக்கே சொல்ல வேண்டும். 'சிஷ்யனாக இல்லாதவனுக்குக் கூறினால், உனக்குப் பாபம் வரும் என்கிறது சாஸ்திரம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உயிர் தன்னை உயிராகக் கருதும் வரை, அதற்குத் துன்பத்தில் இருந்து விடுதலை இல்லை.

அடங்கிய விருத்தியான் என்றால் தன்முனைப்பு இல்லாதவன் என்று பொருள். சீடன் ஏற்கெனவே, நீங்கள் சொன்னதைக் கேட்பேன். கேட்கவில்லையென்றால், என்னைத் தண்டித்துத் திருத்துவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது என்று கூறி, தன்னை குருநாதரிடம் ஒப்படைத்திருக்கிறான்.

தன்னுணர்வு வேறு, தன்முனைப்பு வேறு. நீங்கள் எப்படி என்னைச் சொல்லலாம் என்று குருவிடம் கேட்டுவிட்டால், கற்றல் அதோடு நின்றுவிடும்.

இந்தச் சீடனிடத்தில் அடக்கம் இருக்கிறது.

[3]கற்க வேண்டியதைக் கற்று, கோபம் வராமல், எவன் பணிவாக இருக்கிறானோ, அவனிடம் (செவ்வி) நன்றாக அறக்கடவுள் எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும் என்கிறார் திருவள்ளுவர்.

[4]தவம் செய்து, தன்னைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவனை உலகமே புகழும்.

சீடன் தன்முனைப்பு அடங்கியவன் என்று அறிந்தபின், உடம்பினுள் சீவனைப் பார்த்து உபதேசம் ஓதுகிறார்.

உடம்பைப் பார்த்து உபதேசம் அல்ல, உடம்புக்குள் உள்ள உயிரைப் பார்த்து உபதேசம் செய்கிறார். ஜாதி, இனம், பால்வேற்றுமை என்பதைப் பார்த்து உபதேசம் செய்யவில்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நீ ஒரு முமுக்ஷு, ஜிஜ்ஞாஸுவாக இருந்தால், நான் சொல்வது உனக்கு விளங்கும்.

உடல் வேறு, உயிர் வேறு என்பதுதான் முதல் பாடம். உயிரைப் பார்த்துத்தான் கற்பிக்கிறேன். உன் முகத்தைப் பார்ப்பதன் மூலம், உன் உடம்புக்குள் இருக்கும் உயிரைப் பார்த்துப் பேசுகிறேன்.

எதற்காக உயிரைப் பார்த்து உபதேசம் செய்கிறார்?

ஜீவாத்மா, பூர்ணமான தன்னை அல்பமாக எண்ணிக் கொண்டிருக்கிறது. தானும் துன்பப்பட்டு, பிறரையும் துன்பப் படுத்துகிறது.

ஆன்ம சொரூபமே மருவ வேண்டி

இந்த உயிர், ஆத்ம சொரூபத்தை (தன்னுடைய உண்மை இயல்பை) புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக உபதேசம் செய்கிறார்.

மருவ என்றால் அறிவால் இணைத்துக்கொள்வது என்று பொருள். உயிர், பரமாத்மாவாக தன்னை உணர வேண்டும்.

உயிர் தன்னை உயிராகக் கருதும் வரை, அதற்குத் துன்பத்திலிருந்து விடுதலை இல்லை. ஜீவாத்மா, பூர்ணமான தன்னை அல்பமாக எண்ணிக்கொண்டிருக்கிறது. தானும் துன்பப்பட்டு, பிறரையும் துன்பப்படுத்துகிறது.

'அறியாமையினால், பரமாத்மாவாகிய நீ, அநாத்மாவோடு உன்னை இணைத்துக்கொண்டுவிட்டாய். அதனால் நீயும் துன்பப்பட்டு, பிறரையும் துன்பப்படுத்துகிறாய்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரமாத்ம-ஜீவாத்ம விவேகம் செய்து, அதனால் வரும் அறிவாகிய நெருப்பானது, அறியாமையின் காரியத்தோடு சேர்த்து, அறியாமையையும் அழித்துவிடும் என்று குருநாதர் விவேக சூடாமணியில் சீடனுக்கு உபதேசிக்கிறார். குளவி மண்ணை அழகாகத் தேர்ந்தெடுத்து, ஏதோ ஒரு பசை கொண்டு பிசைகிறது. சிறிது சிறிதாகக் கட்டுகிறது. அதற்குள் குடும்பம் நடத்துகிறது. அதற்குள் அதனுடைய புழு இருக்கும். அதனை ஊதும். இதற்கு ப்ரமர-கீட ந்யாயம் என்று பெயர்.

புழு, தன்னைக் குளவி கொட்டின பிறகு, தன்னை அது மீண்டும் கொட்டிவிடுமோ என்று நினைத்து நினைத்து அது குளவியாக ஆகிவிடும். குளவிப்புழு, குளவியாவதை எண்ணி, குளவியாக மாறிவிடுகிறது.

செறிந்த மண் என்பது தூய மனம், ஸாதந சதுஷ்டய ஸம்பத்தி உள்ள அந்தக்கரணத்தைக் குறிக்கிறது.

கூட்டிற்கும், அதனுள் உள்ள குஞ்சுக்கும் உள்ள தொடர்பு போன்றது, உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு.

ஊதி ஊதி குளவி எப்படி செய்கிறதோ, அப்படியே குருவும் ஜீவர்களாகிய புழுக்குளவிகளை பரமாத்மாவாக மாற்றிவிடுகிறார்.

கர்ம காண்டம், உடம்புக்குள் உள்ள உயிரைப் பார்த்து, பேசுகிறது. அது ஜீவபுத்தியைக் கொடுக்கிறது. அதனால் கர்மாவில் சிரத்தை ஏற்படும். ஜீவ புத்தி இல்லாததால்தான் கர்மாவில் சிரத்தை வருவதில்லை.

நான் ஜீவன் என்ற எண்ணம் இருந்தால்தான், தர்மானுஷ்டானத்தில் சிரத்தை வரும்.

தான் உடல் என்று எண்ணுபவனுக்கு அது வராது. வந்தாலும், அது தொடர்ந்து இருக்குமா என்பது சந்தேகம். வேதாந்த சாஸ்திரம் உயிரைப் பார்த்து பேசுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நீ ஓர் உயிர் என்பது முதல் பாடம். அது தவறாக இருப்பதால்தான் சிக்கல். இதனை உபநயனத்திற்கு முன்பே சொல்லிக்கொடுத்தால்தான், ஸந்த்யா வந்தனம் ஒழுங்காக நிகழும்.

ஜீவாத்ம புத்தி இருந்தால்தான் தர்மானுஷ்டானம், ஈச்வர பக்தி எடுபடும்.

நீ உயிர். உனக்கு மனித உடல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மனித உடல் கிடைத்தற்கரியது.

இந்த உடலை நன்கு பயன்படுத்து. அது சிலகாலம்தான் இருக்கும். பொருளின்பத்திற்காக இது கொடுக்கப்படவில்லை. அறத்தைக் கடைப்பிடிக்கவும், மோக்ஷத்தை அடைவதற்குமே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தப் பாடலின் வாயிலாக உணர்ந்துகொள்ளலாம்.

மேற்கோள்கள்

'இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந।
ந சாஶுஶ்ருஷவே வாச்யம் ந ச மாம் யோ஽ப்யஸூயதி॥

(பகவத்கீதை 18-67)

'இதம் அஶிஷ்யாய ந தேயம்। யோ யதி மோஹாத் தாஸ்யதி ஸ பாபீயாந் பவதி।

'கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. (திருக்குறள் : 130)

'தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும். (திருக்குறள் : 268)

'அஜ்ஞாநயோகாத்பரமாத்மநஸ்தவ
ஹ்யநாத்மபந்தஸ்தத ஏவ ஸம்ஸ்ருதி:।
தயோர்விவேகோதிதபோதவஹ்
நிரஜ்ஞாநகார்யம் ப்ரதஹேத்ஸமூலம்॥

(விவேக சூடாமணி 49)

'குடம்பை தனித்தொழிய புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு. (திருக்குறள் : 338)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நலம் தரும் அறுசுவை அமுதம்



ஸ்ரீஸ்வாமீ ப்ரஜ்ஞாநாநந்த ஸரஸ்வதீ

அழிவில்லாமல், சுதந்திரமாக என்றும் சந்தோஷமாக இருக்கவே நாம் அனைவரும் விரும்புகிறோம். இந்த இலக்கு எல்லா மனிதருக்கும் பொருந்தும். அதை அடைவதற்கு வெவ்வேறு விதமாக ஒவ்வொருவரும் தகுதிக்கேற்றவாறு, முன் ஜென்ம புண்ணிய, பாவ விளைவுகளுக்கேற்றவாறு முயல்கிறோம். சாஸ்திரங்கள், தர்மத்தைக் கடைப்பிடிக்கச் சொல்லியே வற்புறுத்துகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு இவற்றில் எதுவாக இருந்தாலும் தர்மத்தின் அடிப்படைதான் முக்கியம். அன்றாட வாழ்க்கையில் அடையும் இன்பமாக இருக்கட்டும். இறுதியில் அடையும் மோக்ஷத்தில் இருக்கும் ஆனந்தமாக இருக்கட்டும், எதுவும் தர்மத்துக்குப் புறம்பாக இருக்க முடியாது. சுயதர்மம் என்றால் என்ன என்று புரிவதற்கே கடினமாக இருக்கும் இக்காலத்தில் இளம் தலை முறையினருக்கு என்னதான் வழி?

அதிவேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய நகர வாழ்க்கை முறையில் எதை எப்படிக் கடைப்பிடிப்பது? எது மிகவும் முக்கியமானது? எதை இழந்து விட்டால் எல்லாமே இழந்ததாகி விடும்? இந்த கேள்விகளுக்கான விடைகளை நாம் இளம் தலைமுறையினருக்கு, குழந்தைகளுக்குக் கூறி முன்னுதாரணமாக நடக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அன்றாட உணவின் சுவை உண்டவுடன் மறைந்து போகும். வாழ்க்கைக்குப் பயன்படும் அறுசுவை அமுதம் அழிவற்றது. இந்த ஆறு சுவைகளும் குழந்தைகளுக்கு என்றென்றும் அழியா நல் வாழ்வை அளிக்கும். அவை யாவை?

1. உன்னை உணர்ந்து கொள் (Realize your Potential)

தன்னைத் தானே உணர்ந்து கொள்வதற்கு பல்வேறு பொருள்கள் இருந்தாலும், இங்கே குழந்தைகளும், பெற்றோர்களும் தெரிந்து கொள்ள வேண்டியது 'தன்னுடைய சிறப்புத் தகுதி, திறமை' என்பதே.

இறைவனின் படைப்பில் தேவையற்றது, உருப்படாதது என்று எதுவுமே இல்லை. ஒவ்வொருவருக்கும் ஒரு தனித் திறமை இருக்கிறது. அதை எவ்வளவு சீக்கிரம் உணர்ந்து கொள்கிறோமோ அந்த அளவுக்கு வாழ்க்கையில் முன்னேற உதவிகரமாக இருக்கும்.

மற்றவர்களிடம் இருக்கும் நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம். ஆனால் நாம், நாமாக இருப்பதே சாலச் சிறந்தது. தன்னுடைய வலிமையையும், குறைகளையும் குழந்தைகள் நன்றாக அறிந்து கொள்வதற்கு பெற்றோர்களும், ஆசிரியர்களும் துணை புரிய வேண்டும். நம்முடைய ஆசைகளைப் பூர்த்தி செய்யும் கருவிகளாக குழந்தைகளைப் பயன்படுத்தக் கூடாது. திருவள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார்.

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். குறள்:471

வள்ளுவர் காட்டிய வழியில் முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதையும், அதற்கு தனக்கு என்ன வலிமை இருக்கிறது என்பதையும் முடிவு செய்ய வேண்டும். மற்றவர்கள் செய்வதை அப்படியே காப்பி அடிக்கக் கூடாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

2. அன்புடன் உதவு

பெறுதற்கரிய இந்த மனித உடலைப் பெற்றமைக்கு நாம் பிறந்ததிலிருந்தே இறைவனுக்கும், பெற்றோர்க்கும், தெய்வங்களுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும், உடன் வாழும் மனிதர்களுக்கும் கடன் பட்டிருக்கிறோம். இந்தக் கடனை தீர்ப்பதற்காகவே நாம் இறைவனைப் போற்றி வணங்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அன்பின் வடிவே கடவுள். எனவே அந்த கடவுளின் அனுக்கிரகத்தைப் பெற அனைவரிடமும் அன்புடன் பழக வேண்டும். பிறர்க்கு அன்புடனும், பரிவுடனும் உதவ வேண்டும்.

இந்தக் காலத்தில் வேதத்தில் விதிக்கப் பட்ட யாகங்களைச் செய்ய கடினமாக இருக்கலாம். ஆனால், மனித யக்ஞமாக மற்றவர்களுக்கு உதவி செய்வதை எக்காலத்திலும் செய்யலாமே. இந்த பிரபஞ்சமே ஒரு யக்ஞமாக தான் இயங்கி வருகிறது. அதாவது இயற்கையில் எல்லாமே தங்களை அற்பணித்துக் கொள்கின்றன. தாவரங்கள், மனிதர்களுக்கு உணவாக மாறிவிடுகின்றன. பசு பால் தருகிறது, சூரிய பகவான் வெளிச்சமும் வெப்பமும் தருகிறார். மரங்கள் கழிவு நீரை உண்டு சுவையான கனிகளை நமக்கு ஏராளமாக வழங்குகின்றன. மனிதனுக்கு மட்டுமே சுயநலம் கொண்டு தானே எல்லாவற்றையும் வைத்துக் கொள்ளலாம் அல்லது அன்புடன் மற்றவர்க்கு உதவிடலாம் என்கிற வாய்ப்புள்ளது.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு குறள்:80

என்கிறார் பொய்யாமொழியார்.

3. உண்மை பேசு

ஏன் உண்மை பேச வேண்டும் என்பதற்கு நூற்றுக்கணக்கான விளக்கங்கள் சொல்லாம். இங்கே அவற்றில் மிக முக்கியமானவற்றைப் பார்க்கலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

★ ''சத்யமேவ ஜயதே'' – உண்மையே வெல்லும் என்று வேதம் சொல்கிறது. வேதவாக்குக்கு மேல் எதுவுமில்லை.

★ சத்யம் கூறுவது மிகவும் எளிது. உள்ளதை உள்ளபடி சொல்ல வேண்டியது தானே. பொய் சொல்லத்தான் யோசனை செய்ய வேண்டும், நினைவு கொள்ள வேண்டும்.

★ சத்தியமே கடவுள். சத்தியம் பேசும் போது நாம் கடவுளுடன் இருக்கிறோம். பொய் சொல்லும் போது கடவுளிடமிருந்து பிரிந்து விடுகிறோம்.

★ பொய் சொல்பவன் பிளவுபட்ட மனிதனாகிறான் (Split Personality). சிந்தனை, சொல், செயல் ஆகியவை மாறுபடுவதால், தனி ஒரு மனிதன் பிளவு பட்டு மூன்று கூறுகளாகப் பிரிந்து அவதியுறுகிறான்.

★ ஒரு பொய் அடுத்தடுத்து பொய்களில் கொண்டு போய் விடுவதால், பொய்மையே வாழ்வாகி துன்பமேமிஞ்சும்.

★ உண்மையே பேசுபவன் நிம்மதியாக உறங்கி, உற்சாகத்துடன் விழித்து, சிரித்த முகத்துடன் நோயற்று வாழ்வான்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு
பொய்யா விளக்கே விளக்கு குறள்:299

என வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்.

4. கோபம் தவிர்

நம் விருப்பத்திற்குத் தடை செய்பவர்கள் மீது கோபம் ஏற்படுகிறது. நம்மை விட தாழ்ந்த நிலையிலிருப்பவரை கோபத்தால் தண்டிக்க நினைக்கிறோம். நம்மை விட வலியவர் செய்தால், வேறு வழியில்லாமல் அழுகிறோம். இரண்டுமே நாம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒரு விஷயத்தை ஏற்றுக் கொள்ளாததால் ஏற்படும் விளைவுதான். எல்லா சாஸ்திரங்களும் சினத்தை மிகவும் கொடிய பிரச்சனையாகத்தான் சித்தரிக்கின்றன. எனவே நாம் சினத்தைப் படிப்படியாக வெற்றி கொள்ள வேண்டும்.

★ முதல் படியாக கோபம் ஏற்பட்டால் மற்றவரை தண்டிக்கக் கூடாது. அந்த எண்ணத்தைத் தள்ளிப் போட வேண்டும்.

★ நம் கோபம் மற்றவர்க்கு தீங்கு இழைக்கா வண்ணம், சிந்தனைகளை ஒரு தாளில் எழுதிக் கொள்ளலாம். பிறகு படித்துப் பார்த்தால் நமக்கே வேடிக்கையாக இருக்கும்.

★ கோபத்தை வெல்ல மூன்று முக்கிய குணங்கள் வேண்டும். அவை

1. சமத்துவ மனம் (வெற்றி தோல்வியை சமமாக ஏற்கும் மனம்)

2. நுண்ணிய உணர்வு (துன்புறுத்தாமை)

3. நுண்ணிய புத்தி (எதிர் மறை செயல்பாடு கூடாது)

★ நமக்கு சாதகமில்லாத சூழ்நிலையில் பொறுமை வேண்டி பிரார்த்தனை செய்ய வேண்டும்.

★ கோபம் வராமலிருக்க நல்ல விஷயங்களைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

★ எல்லாவற்றிற்கும் மேலாக எந்த விளைவையும் கடவுளின் பிரசாதமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தெய்வப்புலவர்

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம். குறள்: 305

எனக் கூறியுள்ளார். -தொடரும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



Panchakshari and Mrityunjaya Mantra 6

Parama Pujya Sri Swami Paramarthananda

We are looking into the meaning of Mrityunjaya mantra.

Sun, moon, fire - these three are considered as the illuminators of the world.

These three are considered to be the eyes of Lord Shiva who is the vishwarupa iswarah.

This is one significance and there is another significance also. According to this, the two eyes are considered to be the material eyes, by which we experience the material world.

If you have to see the satyam vastu, satyam brahma, the atma swarupam which is inherent in the whole creation, ordinary eyes will not be sufficient. We require divya chakshuhu, jnana chakshuhu, tritiya chakshuhu which is the atma jnanam alone.

This atma jnanam alone destroys all our limitations, this alone destroys all our desires. This philosophical significance of the third eye is revealed through the puranic story. In one story, Lord Shiva burns manmatha, the kama devatha through his third eye. Kama means desire. Lord Shiva burnt manmatha using his third eye reveals that we can burn our desires only through the jnana chakshuhu.

Jnanam alone can burn all the desires which is symbolised by manmata dahanam. Kama is called manmatha because - manah mathnati - it churns the mind, it makes the mind restless and therefore desire is called manmatha. If we worship Lord

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Shiva, he will bless us also with the third eye. One will get an opportunity to study vedanta, get self knowledge.

prajahaati yadaa kamaan sarvaan paartha manogataan
atmanyevaatmanaa tushtaha sthitaprajnastadochyate

The other story is tripuradahanam - the story of the rakshasas, who were called tripuras because they had three cities made by Mayah, the architect of the asuras. One is a golden city, one is a silver city and the other is an iron city. These three cities were ruled by these tripuras. All the asuras once they got power started doing akramas. Lord Shiva was prayed for and all the other gods thought that Lord Shiva cannot destroy these asuras single handedly as they were extremely powerful. All the other gods volunteer to help Lord Shiva.

The earth itself became the chariot. The sun and the moon became the wheels of the chariot. The Himalayas became the bow. Lord Vishnu himself became the arrow and Brahmaji became charioteer. The whole ocean became the quiver to hold the arrows. The horses to pull this chariot were the four vedas.The snake, the ananta became the string which ties the bow.

All these people were ready to assist Shiva and Shiva climbed the chariot. The asuras came and they were waiting for the order. The Lord opened his third eye and the whole thing was finished. Before the war could even start , the whole thing got over. That is the glory of the third eye. **(To be continued)**

Published by **S. Ilangovan,** No. 22, Sriman Srinivasa Road, Alwarpet, Chennai - 600 018 for and on behalf of **Vedanta Sasthra Prachara Trust,** Sri Swami Chidbhavananda Ashramam, Vedapuri, Chatrappatti Road, Theni-625 531 and printed by **B. Rajkumar** at **Rasi Graphics Pvt. Ltd.,** 40, Peters Road, Royapettah, Chennai - 14.

Editor: **Krishnaveni Hariram**

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஆடிப்பெருக்கு சிறப்பு வழிபாடு (02.08.2015)



மேல்மங்கலம் பாடசாலை மாணவர்களுக்கு அருளுரை
(09.08.2015)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Registered News Paper Licence No. TN/SR/TEI/005/2013-2015
TN/WPP-123/SR/2013-2015 Posted at Theni MDG 625 531.

ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தி வித்யாபீடம் திருப்பணி துவக்கம் (23.08.2015)



ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி சிறப்பு வழிபாடு (05.09.2015)

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,